தத்துவபோதினி.

பு. கூ.] சென்னைப்பட்டணம் கஅசுசுஎஎ ஜூலைமீ எஉ. [இல. கூ.

வாகுதேவா யிதீயம், ஸதுஞ்ஜாநஉநஞ்ஞம்வ்ரூஹ, ஸாஞ்ஜ்ஞ்ஞ்ரூஜி ஐஞ்ஞகம், தஜெதா பஷ-தூஞதாஞம் தஉஞ-ஞுவஉநாயேம், யவநதயிஉ-ஞுஞ்ஞகாஜ்ஞெஹவஞ்ஜி, கயெ தஜெஉ-ஃவதேவாவியஞ்ஜி.

ஸதுதேவஜயதெ நாநுகம்.

அட்டவணை.

விஷயங்கள்.

	பக்கம்.		பக்கம்.
க. கடவுள்துதி.....	சகூ	அ. பேகன்வியாசம்.....	நுஉ
உ. விளம்பரங்கள்.....	சச	கூ. அமிர்தவசனி.....	நுகூ
ஊ. தத்துவபோதினி.....	சசு	கo. நிருபம்.....	நுநு
ச. பகவத்கீதை.....	சஅ	ஙக. நிருபம்.....	நுஅ
டு. உபநிஷத்து.....	சக	கஉ. அமிர்தவசனியின்விளம்பரம்.....	நுசு
சு. மீறுநூல்.....	நுo	கஙூ. சந்தாதாரர்அட்டவணை.....	சுo
எ. மாதுவாச்சல்லியம்.....	நுக		

சத்தியமே சக்தி—தத்துவமே சித்தி.

கடவுள்துதி.

ஓம்பரப்ரும்ஹணேநமஃ.

நேரிசைவெண்பா.

பாலிற்சுவையும் பனிமலரில்வாசனையும்.....*
போலெப்பொருளிடத்தும் புல்லியே - மூலத்.....*
தொருமுதலாயோங்கு முயர்பரனேயின்றுன்.....*
திருவருளேயெங்களுக்குச் செய்.....*

கலியாணிராகம் - ஆதிதாளம்.

பல்லவி.

சத்துச்சித்தாநந்தப்பொருளாகியதேவா
சரணம் மஹாநுபாவா.

அநுபல்லவி.

நித்தியமாய்ச்செழித்து நிறைந்தசர்வாதார,
நிகிலவுலகுந்தரு நிமலசாக்ஷாத்கார.....(சத்து)

சரணங்கள்.

க. எள்ளுக்குளெண்ணெயைப்போலே யெப்பொருளிலுந்தானே,
இருந்தும்அரூபியாகி யேகமாய்நின்றீரானே,
விள்ளும்சத்வகுணத்தில் விளங்கும்எம்பெருமானே,
மீண்டும்அடியருள்ள வீட்டில்வசிக்குங்கோனே.....(சத்து.)

உ. அஞ்ஞானமென்னும்இருட் டறையுட்கிடந்துதீயே,
அனேகதுயரங்களில் அழுந்தும்எமக்குநீயே,
மெய்ஞ்ஞானவொளிதந்து விளக்கியின்பருள்வாயே,
வினையேற்குன்அருளல்லால் வேறொன்றிலையேதாயே.....(சத்து.)

ங. சிற்றறிவாற்செய்த தீமையைப்பொறுத்திந்த,
சிறுமியர்க்குக்கல்வி செழித்துஞானம்பொருந்த,
முற்றும்தயைசெய்தெங்கள் முயற்சிகளெல்லாமுந்த,
முதிர்வரந்தந்தருள்வாய் முதல்வனேகச்சிறந்த.....(சத்து.)

விளம்பரம்.

இந்தச் சென்னைத் தத்துவபோதினியை வாங்க மனமுடையவர்கள் மயிலாப்பூரில் தத்துவபோதினி அச்சுக்கூடத்தில் வேதஸமாஜத்தின் காரியதர்சியாகிய-பா. சுப்பராயலு செட்டியார், பி. ஏ. பி. எல். அவர்களுக்கு எழுத்துமூலமாய்த் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

இதற்குச் சந்தாவிவரம்.

சென்னைப்பட்டணத்திலுள்ளவர்கள் வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.....க - அ - 0

அதற்கு வெளியிலுள்ளவர் தபால் கூலியுடன் சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய். உ - 0 - 0

பத்துப்பிரதிகளுக்கு அதிகமாய் வாங்கும் வெளியிலுள்ளவர்கள் தபால்கூலியுடன்சேர்த்து வருஷம் ஒன்றுக்கு ரூபாய்.....க - கஉ - 0

இதற்குச் சந்தாதார்கள்தங்கள்சந்தாக்களை யந்தந்த வருஷத்தில் முன்பணமாய்க் கட்டவேண்டியது. மேமாசத்துக்கு மேமாசம் இதற்கு வருஷமாய்க்கொள்ளவேண்டியது. வருஷம் நடுவில் வாங்கத் தொடங்குவோர்க்குச சந்தாவிதம் - அ- அணு உயர்த்தப்படும்.

வெளியிலிருந்துசந்தா அனுப்பவேண்டியவர்கள் தபால் முத்திரைகளனுப்பலாம். ஆனல், அப்படி யனுப்பப்படும் முத்திரைகளை மாற்றுவதற்காக, ரூபாய் ஒன்றுக்கு - ஒரு அணு வீதம்-வட்டம்சேர்த்து அனுப்பவேண்டியது.

இந்தப் பத்திரிகையின் சந்தாதாரர்களும், பங்குக்காரர்களும், இடம் மாறும் போது அந்தவிவரத்தைத் தயைசெய்து காரியதர்சிக்குத் தெரிவிக்கவேண்டியது.

புஸ்தகவிளம்பரம்.

கிரந்தத்திலும், தமிழிலும் இயற்றப்பட்டபாலவியாகரணம். 0 - ச - 0

தபால்கூலி..... 0 - க - 0

தெலுங்கு பாலவியாகரணம்... 0 - ச - 0

தபால்கூலி..... 0 - க - 0

வேதசமாஜத்தார் முதல் விண்ணப்பம் விக்கிரஹ ஆராதனத்தைக்குறித்தது நன்முய் பயிண்டுசெய்தது,..... 0 - அ - 0

தபால்கூலி..... 0 - உ - 0

ஷெ மட்டபயிண்டுள்ளது... .. 0 - எ - 0

தபால்கூலி..... 0 - உ - 0

வேத சமாஜத்தார் இரண்டாவது விண்ணப்பம் பெண்கள் கல்வியைக்குறித்தது..... 0 - அ - 0

தபால்கூலி..... 0 - உ - 0

தமிழில்ஸ்தோத்திரபாடம்பிரதி 0 - க - 0

தபால்கூலி..... 0 - க - 0

கஅசுடுஹூல மேமாசம் முதல் கஅசுசுஹூல ஏப்பிரல்மீ வரையிலுள்ள தத்துவபோதினி பயிண்டுசெய்தது. ..... ரு - 0 - 0

தபால்கூலி..... .. 0 - ச - 0

வெளியிலுள்ளவர்கள் புஸ்தகம் ஒவ்வொன்றுக்கும் குறித்த தபால்கூலி சேர்த்தனுப்பவேண்டியது.

நிருபக்காரருக்கு விளம்பரம்.

இந்தப்பத்திரிகையில் பிரசுரமாகும்படி தயைசெய்து நிருபமெழுதியனுப்புமனவான்கள், அதுபிரசுரமாக வேண்டியதற்கு முன்மாதமே, உபகுக்குள்ளாக அந்த நிருபங்கள் எங்களிடம் சேரும்படி அனுப்புவார்களாகில் வெகு உபகாரமாகவிருக்கும்.

அப்படி யனுப்பப்படும் நிருபங்களில் நிருபக்காரருடைய இருப்பிடமும் கையெழுத்துமில்லாதபக்ஷத்தில் அவைகளைப்பிரசுரப்படுத்துவது சாத்தியமா யிருக்கமாட்டாது.

எங்கள்கொள்கைகளை ஆக்ஷேபித்தெழுதினல் நாங்கள் பிரசுரம்செய்யமாட்டோமென்கிற கருத்தினலே நிருபமெழுதமனமுடைய பலர் எழுதாமலிருப்பதாய் நாங்கள் கேள்விப்படுகிறோம். உண்மை வெளியாகவேண்டியதே எங்கள்கருத்தாகையால், எங்கள் கக்ஷிகளை யாக்ஷேபித்தெழுதப்படும் நிருபங்களை நாங்களிதில் பிரசுரஞ்செய்வது மாத்திரமேயன்றி, பழுதானவையாய்த் தோன்றும் ஆக்ஷேபங்களுக்கு எங்களாலியந்தவரையில் சமாதானம் சொல்லவும் சரியான ஆக்ஷேபங்களை ஒத்துக்கொள்ளவும் சித்தமாயிருக்கிறோம்.

விஷயங்களின் மேலுள்ள குணதோஷங்களை யெவ்வளவெடுத்துச் சொன்னலும் எங்களுக்குச் சம்மதமே யாகிலும், வியக்தி துஷணங்களடங்கிய நிருபங்களை இதில் பிரசுரப்படுத்த இயலாதாகையால் அதற்காக மன்னிக்கக்கோருகிறோம்.

கடைசியாக உண்மைவெளியாகி நன்மைபரவவேண்டுமென நாங்கள் முயலுகி

றவாறே நிருபக்காரரும் பரிசுத்த சிந்தை யுடன் தங்கள் கருத்துகளை வெளியிடுவார்களென்று நம்புகிறேம்.

தத்துவபோதினி.

சோதரர்களே!

சென்னையில் கனவான்கள் வீட்டில் நடக்கும் கல்லியாண மஹோத்ஸவங்களின் பெருமை யாவரும் அறிந்திருப்பீர்களே! சதிரில்லாக்கல்லியாணம் பதராமெனக்கருதி, ஆறுமாசத்துக்குமுன்பாகவே சதிர்பந்தல் போடுவித்து, அதற்கு முன்பாகவே தாசிகளுக்குத் தாம்பூலம் வைத்து, பெருங்கூத்துவிளைவிக்கும் கனவான்களைப்பற்றியும் யாங்கள் கேள்வியுற்றிருக்கிறேம். தாசிகளை இவ்வளவு கொண்டாடிய இச் சென்னையிலும், இவ்விஷயத்தைப்பற்றி விசேஷ சீர்திருத்த மூண்டாக இடமுண்டாயிருக்கிறதென்பதைக் கேட்க நமதன்பர்கள் வெகுசந்தோஷமடைவார்களென்று நம்புகிறேம். சென்னையில் வீற்றிருக்கும் போர்டு சிரஸ்தாவாகிய ம-ள-ள-ஸ்ரீ-ச. ஜயராமசெட்டியார் தமது புத்திரிக்கு நேத்திரோத்ஸவமாக விவாஹ மஹோத்ஸவம் நடத்தப்போகிறோன்று கேள்வியுற்று அநேக முதலிமார்களும், நாயகர்மார்களும், விசேஷமானசதிராடம்பரம்நடக்குமெனநம்பி ஆவலோடெதிர்பார்த்திருந்தனராம். இந் நகரத்திலுள்ள வேசையரும், தமது நிங்கலாதரித்திர மொருவாறுநீங்குமெனக்கருதி தமதிஷ்டநாயகராகிய கனவான்கள் மூலமாய் அக் கல்லியாணத்தில் பிரதான விடம் பெறவேண்டிய முயர்சிகள் செய்துவந்தனர். இவர்கள் கருத்துக் கிசைந்ததுபோலவே, இவர் ஆசையைப்பெருக்க செட்டியாரும் கடிமணப்பந்தல் விசேஷ அலங்காரமாக போட்டுவித்தனர். அன்றியும் அவர் கருத்தோ வேறுயிருந்தது. கல்லியாணம் சமீபிக்கவே, சிலர் தமதிஷ்டர்களின்பொருட்டு பரிந்துபேசத்தலைப்பட, யாவரும் வெட்கி நாணமடையும்படி செட்டியார் தமது கருத்தை வெளியிட்டனராம். அவர் தன்னேயேவிய பலருக்கும், சதிர் எவ்வளவும்கூடாதென்று நிர்தாக்ஷண்ணியமாய் மறுத்துவிட்டதைக் கேட்க மிகவும் ஆச்சரியப்படுகிறேம். இவ்விசேஷத்தின்பொருட்டு இக்கல்லியாணம் நெடுங்காலம் நினைக்கப்படுமென்று நம்புகிறேம். இதுவரையிலும் சென்னையிலும், உள்நாட்டிலுமுள்ள சுதேசகனவான்கள் சதிரில்லாமல் யாதொரு கல்லியாணமும் நிறைவேறமாட்டாதென்று கொண்டிருந்தஆதாரமற்றகொள்கையிதனல் அடியோடு அற்றுப்போகின்றது. சதிரும், அபரிசுத்தராகியதாசிகளும் இல்லாமல் விவாஹ மஹோத்ஸவங்கள் வெகு ஆடம்பரமாக நடத்தப்படலாமென்பதும் இதனல் விசிதப்படுகின்றது. நம்மில் வம்சபாரம்பரையாய் வெகுகாலம் வழங்கிவரும் பல துராசாரங்களில் கொடிதாகிய ஒன்று இனிதலை யெடுக்கமாட்டாதென நன்மை கருதிய யாவரும் மகிழ்ச்சியடையலாம்.

அன்றியும் அக்கல்லியாணத்துக்கு வந்திருந்த சிலர், தாசிகளுக்கு நேரிட்ட இந்தக்குறைவைப்பற்றி மிகவும் வியசனமடைந்து, இவ்வளவு சீமைக்கும் காரணமாயிருந்த வேதசமாஜத்தாரை நிந்தித்ததாகக்கேள்விப்படுகிறேம். வேதசமாஜத்தார் சதிர்முதலாகியதுராசாரங்களை விட்டொழிக்கவேண்டுமென்று பத்திரங்கள் மூலமாய்எழுதி பிரசுரம்செய்தபோதிலும் அவர்கள்வாயாற்சொன்னதைவழக்கத்துக்குக்கொண்டுவரும்பாபத்தைக்கட்டிக் கொள்ளவில்லையென்றிங்குணர்த்துவதெங்கள்கடமையென்றுநினைக்கிறேம்.மேலும் ஜயராமசெட்டியார் இக்கொள்கையை எங்கள்சமாஜத்தாரால்பெற்றனரென்றுவது; இவர்களால்ஏவப்பட்டனரென்றுவது நம்பவேண்டுவதில்லை.இச்சமாஜம்ஏற்படுவதற்குமுன்னமே, அவர் தாசிகளை லக்ஷயஞ்செய்து நமது சுபபிரஸ்துதங்களான சபைகளுக் கலங்காரமாகக் கொள்ளும் கொடுமையைப்பற்றி பிரஸ்தாபித்து அக்கொடுமையை நீக்கவேண்டுமென சென்னைசுதேசாபிவிருத்தியானசங்கத்தின்தலைமையுள்ள அத்தியக்ஷராய், முயற்சிசெய்ததையும் யாங்களறிவோம். ஆகையால் தாமித்திரர்களாகிய நமதன்பர்கள், நம்

மை எவ்வளவும் கொந்துகொள்ள வேண்டுவதில்லை. இஃது முற்றும் ஜயராம செட்டியாருடைய காரியமேயன்றி வேறல்ல. யாங்கள் வாயால்மட்டும் உசிதப்படுத்திய கொள்கையை, அவர் தமது செய்கையால் விவாதமறக் காட்டிய நன்மைக்கு யாங்களவருக்கு மிகவும் வந்தனஞ் செய்கிறோம்.

இச்சதிரினு லீதுவரையிலும் சென்னையில் விளைந்துக்கொண்டிருந்த தீமைகள் லோகப்பிரசித்தமாயிருப்பதினுல் அவைகளை யிவ்விடத் தெடுத்துரைக்க வேண்டுவதில்லையென்று நினைக்கிறோம். நம்மையும் நமது சிறுவர்களையும் மயக்கி, பெரும் நரகத்துக்காளாக்கும்தீமையை கவனியாவிடினும், இதனுல் நமது தேசத்துக்கே நேரிட்டிருக்கும் நிந்தையும் அவமானத்தையும் கவனிக்கவேண்டாமோ? எக்காலத்திலும், எந்நாட்டிலும் அதிநீசத்துவமுடைய வியபசாரிகளை சபாயோக்கியராகக்கருதி சம்மானித்து, சுசீலமும், பரிசுத்தமும், சத்தியமும், கற்பும், விளைவிப்பதற்கு ஹேதுவாய் செய்யப்படும் சுபகாரியங்களையும், அவர்களைக் கொண்டு நடத்தும், விபரீதம் இந்நாட்டிலொழிய வேறெங்கும் காண்கிலோம். இதைக்கண்டே நமது தேசத்து நடைகளைக் கண்ணுற்ற சில அந்நியதேசத்தார் நமக்கு வியபசாரத் தோஷங்களில் அசூயைகிடையாதென்று அபிமதப்பட்டனர். மேலும் நமதுநீதிகளும்வெகுதாழ்ந்தவைகளாயிருக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டு நம்மை வீணே நிந்திக்கநேரிட்டது. இவ்வளவு அவதூறுக் கிடமாகிய இக்கொடிய ஆசாரம் நெடும்பழக்கத்தால் மனோரம்மியமாகி, அபகீர்த்தியையும் அளவிறந்த வேறுதீமைகளையும்விளைத்துவந்தது. உண்மையி லீஃதெப்படியிருந்தாலும், இனி சுதேசபிரபுக்கள், தாசிகளை அவர்கள் தகைமைக்குத்தக்கப்படியன்றி, மதியார்களென்று நம்புகிறோம். வியபசாரமேஜீவனமாகவுடைய யிச்சண்டாளரை இனி சபாயோக்கியர்களாக மதித்து சேர்த்துக்கொள்ள மாட்டார்களென்று வற்புறுத்திக்கூறலாம்.

சதிர்களை யிவ்வாறு தொலைத்துவிடுவதினுல் நமது விவாஹசமயங்களில், வேடிக்கை வினோதங்களுக் கிடமில்லாமற் போகிறதென ஒருவரும் சிந்திக்கவேண்டியதில்லை. நமது செட்டியார் நடாத்திய கடிமணத்தை கௌரவிக்கவந்த கனவான்களை அவர் வேறுவிதத்தால் சந்தோஷிக்கச்செய்யாமற்போகவில்லை. சார்வதாரி வினோதமும் மனோரம்மியமுமான சங்கீதவாத்தியங்கள் முழங்கிக்கொண்டிருந்தன. மேலும் சங்கீத சாஹித்திய நிபுணர்களாகிய பாடகர்கள் வீணை முதலிய பல வாத்தியக்கருவிகளோடும் யாவரும் அதிசயிக்கும்படி கானஞ் செய்தார்கள். இவ்வித குற்றமற்ற உல்லாசத்தைவிட்டு, அசூயையும், அசுத்தமும், அபாயமும், நிரம்பிய காரியத்துக் கேனை நம்மவர் உட்பட்டிருக்கின்றனர். இனியாவது யுத்தாயுதங்களை யறிந்து செட்டியார் செய்துகாட்டிய சீர்திருத்தமுள்ள நடையை அனுஷ்டிப்பார்களென நம்புகிறோம்.

நம்மவர் நடாத்தும் கல்லியாணங்களைப்பற்றி பிரஸ்தாபித்தமையால், இவற்றில் காணப்படுகிற மற்றொருபெருங்குறைவைப்பற்றி இரண்டொருவசனங்கள்சொல்லுவ தனுசியசமன்றென நினைக்கிறோம். நம்மவரில் பெரும்பாலோர் கல்லியாணங்களின் பொருட்டு கடன்பட்டாவது அபரிமிதமாய் செலவுசெய்வதை யெல்லோரும் அறிவார்கள். இக் கொடியவழக்கத்தினுல் அநேகர் கல்லியாணஞ்செய்து சுகப்படுவதற்குபதிலாக விசேஷதுன்பத்துக் காளாகின்றனர். இத் துர்வழக்கத்தினுல், மத்தியமஸ்திதியிலுள்ள அநேகர் ஏழைகளாய்விடுகின்றனர். ஏழைகள் குடிக்கக்கஞ்சுமற்று போகின்றனர். ஒருநாழிகை சந்தோஷத்தின்பொருட்டு தமது வாழ்நாள்முழுமையும் நீங்கலாவறுமைத்துன்பத்தைச் சகிக்கத் துணியும் இவர்களுடைய மதியை என்னென்று சொல்லலாம். இப்பைத்தியம் இவர்களுடன்பட்டாவது தங்கள்பெண்களுக்கு ஆபரணங்கள்செய்விக்கும் பெரும்பைத்யத்தினுலன்றி வேறெதனுலும் அதிகரிக்கப்பட வில்லை. சிலர்இக்கல்லியாணத்தின்பொருட்

டு அநேகவருஷம் தமதுவயிற்றை வஞ்சித்துபணம்சேர்க்கினறனர். ஏனையோர் முன்வருவதைச் சற்றும் யோசியாமல் கையிலிருப்பதை யெல்லாந் தாரைவார்த்து விடுகின்றனர். மற்றுஞ் சிலர் கையிலொன்றுமில்லாதிருந்தும் வீடுமுதலிய பொருள்களை அடகுவைத்தாவது, கடன்வாங்கியாவது, செலவு செய்யத் துணிகின்றனர். அய்யோ! சுகப்படும்பொருட்டுசெய்யப்படும் இந்த சுபகாரியம், இவ்வளவு அசுகத்தையுண்டாக்குவது நமதுமடமையாலன்றே? ஆயினும், பொருள்படைத்தவர்கள் விசேஷதிரவியம் விரயஞ்செய்யலாகாதாவென்றாலோ இப்படி விரயஞ் செய்வதினால் அவர்களுக்கு விசேஷநஷ்டம்நேரிடாவிட்டாலும், வீணில்'பாழாக்கிற திரவியத்தை சத்பாத்திரங்களில் விரயஞ்செய்யலாமென்பதாகமாத்திரம் குறிக்கவேண்டியதா யிருக்கின்றது. மேலும் இவர்கள் செலவுசெய்வதைப்பார்த்து, ஏழையாராகிய மத்தியமஸ்திதியி லுள்ளவர்களும், வறியோரும் புலியைப்பார்த்து நாய் சூடுபோட்டுக் கொள்வதுபோல் தாங்களும் செலவுசெய்து நஷ்டத்துப்போகின்றனர். இவர்களிப்படி கெட்டுப்போவது இவர்களுடைய குற்றமேயல்லாமல் கனவான்களுடைய குற்றமல்லவெனில், இஃது நியாயத்துக்குப் பொருந்தமாட்டாது. மேலான ஸ்திதியி லுள்ளவர்கள் தாழ்ந்தவர்களை தங்களுடைய நடையால் சீரான மார்க்கத்திலும், ஒழுக்கத்திலும், செலுத்தவேண்டியது கடமையாயிருக்கின்றது. மேலும் தனமுள்ளவர்கள் இவ்வாறு வீண்விரயஞ்செய்வதினால் சத்பாத்திரங்களில் சாதுக்களுக்கு சஹாயஞ் செய்ய அசக்தர்களாகின்றனர், அல்லது மனதில்லாதவர்களாகின்றனர். இவ்விஷயத்திலும் நமது செட்டியார் பெருந்தன்மையோடுநற்பழக்கத்தை புகட்டும்படி நடந்துகொண்டனனென்பதைக் கேட்க நமதன்பர்கள் சந்தோஷப்படுவார்கள். இவர் எனையோரைப்போல தமது திரவியத்தைச் சதிரிலும் பாணமுதலிய வேடிக்கைகளிலும் செலவுசெய்யாமலும், முற்றும் சோம்பலுற்று பிறரை ஏமாற்றி வயிர்வளர்க்கும்பிராமணர்களுக்கே, சகாயஞ் செய்யாமலும், அக்கல்லியாணகாலத்தில், மிகவும்ஏழைகளும் உதவியற்றவர்களுமாய் சஞ்சிதொட்டியிலிருப்போருக்கு திட்டமாய் விருந்து செய்வித்து அவர்கள் போஷணையின்பொருட்டு திரவிய சகாயஞ்செய்தாரென்று கேள்விப்படுகிறோம். இஃது மிகக்கொண்டாடத்தக்ககாரியமென்பதை யாங்கள் சொல்லவேண்டுவ தில்லை. இதை மற்ற பிரபுக்களாகிய இந்நகரவாசிகளும், ஏனையோரும் கவனிப்பார்களெனகோருகிறோம்.

அமிருதவசனியென்னு மொரு சிறுமாதாந்திரபத்திரிகை சிலமாதங்களாய் எங்களுக்கெட்டி அதை காண மிகவும் சந்தோஷமடைந்தோம். இஃது ஸ்தரீகளின் பொருட்டு ஸ்திரீகளாலேயே எழுதப்பட்டு, அழகிய சிறுபுத்தகமாய் அச்சிடப்பட்டு வருகின்றது. இதன் அழகிய நாமத்துக்குத்தக்கபடியே இதிலடங்கிய வாக்கு அமிருதமயமாயிருக்கக்கண்டு யாங்களடைந்த ஆநந்தத்துக்களவில்லை. இதில் பற்பல உபயோகமுள்ள விஷயங்களைப்பற்றி யாவருக்கும் எளிதில் விளங்கும்படி அதி சுலபநடையில் எழுதியிருப்பது போலவேறெவ்விடத்தும்யாங்களிதுவரையில் பார்த்தோமில்லை. இதன் அழகும் மேன்மையும் இதை வாசிப்போருக்கன்றி, செம்மையாய் விளங்கமாட்டாதாகையால், இதிலிருந்து சிலபாகங்களை இப்பத்திரிகையில்பிரசுரம்செய்கிறோம். இன்னும் இதைப்பற்றி விசேஷமாய் பிரஸ்தாபிக்கசமயமில்லாதபடியால், இஃது எல்லோரும் அபிமதித்துக் கொள்ளத்தக்கதென்றுமாத்திரம் குறிக்கின்றோம். இதன்சந்தாவிபரமும், மற்றசங்கதிகளும், இப்பத்திரிகையின் வேறோரிடத்தில் காணலாம்.

பகவத்கீதை.

(தொடர்ச்சி.)

ஈக. ஓய்பார்த்தனே! எதனால் தருமமும், அதர்மமும், செய்யத்தக்ககாரியமும், ய

தார்த்தமல்லாதவழி அறிகின்றனை அந்தபுத்தி ராஜசமானது.

ஈஉ. ஓய்பார்த்தனே! எந்தபுத்தி தமஸ்ஸினல் மூடப்பட்டு, அதர்மத்தையும், தர்மத்தையும், சமஸ்தபதார்த்தங்களையும், விபரீதமாக நினைக்கின்றதோ அது தாமஸமானது.

ஈஊ. ஓய்பார்த்தனே! யோகத்தினல்விபசரிக்காத எந்தமுயற்சியினல், மனத்தினலும் பிராணேந்திரியங்களாலும் எல்லாகாரியங்களும் நியமிக்கப் படுகின்றனவோஅதுசாத்விகமுயற்சியாம்.

ஈச. ஓய்பார்த்தனே! பலத்தை விரும்பியவன் (அந்த)ஆசையினல் தர்மார்த்த காமங்களைஎந்த முயற்சியினல் தரிக்கின்றனை அது ராஜஸமானது.

ஈடு. ஓய்பார்த்தனே! புத்தியீனன் எதனல் (ஏவப்பட்டு)நித்திரை, பயம், துக்கம், கவலை, மதம், இவைகளை விடமாட்டானை, அம்முயற்சி தாமஸமானது.

ஈசு. ஓய்பரதகுலோத்தமனே! மூன்று விதங்களான சுகங்களையும் இப்பொழுது என்வாக்கினல்கேட்பாய். எந்தசுகத்தல் அப்பியாசத்தினல் (என்றல் உழைப்பினல்)சந்தோஷித்துதுக்கநிவாரணத்தை யடைகின்றனை,

ஈஎ. எந்த சுகம் முதலில் விஷத்தைப் போலிருந்து கடையில் அமிருதத்தல்லியமாகின்றதோ, ஸ்வபுத்தி பிரகாசத்தினல் ஜனிக்கின்றதோ, அச்சுகம் சாத்விகமானதென்று சொல்லப்பட்டது.

ஈஅ. விஷயேந்திரிய சம்பந்தத்தினல்எதுமுதலில் அமிருதத்தல்லியமாயிருந்துகடையில விஷத்தைபம்பாலாகின்றதோ, அச்சுகம்ராஜஸமென்று சொல்லப்பட்டது.

ஈக. எது அனுபவகாலத்திலும் பின்விளையும்பயனிலும், ஆத்மாவுக்குமோஹத்தைச் செய்வதாய், நித்திராலசியப் பிரமாதங்களால் ஜனித்த அச்சுகம்தாமஸமானதென்று சொல்லப்பட்டது.

ச0. எவ்விதஸ்வபாவங்களிலும், மாயாஜனிதமானஇம்மூன்றுகுணங்களால்விடப்பட்டதுபூமியலாவது ஸ்வர்க்கத்திலாவது,தேவர்களுக்குள்ளாவதுஇல்லை.

சக. ஓய்சத்துருசம்ஹாரா! பிராம்மணக்ஷத்திரிய வைசியர்களுக்கும், சூத்திரர்களுக்கும்,கர்மங்கள்பிரகிருதி ஜனிதமானசாத்விகாதிகுணங்களால் விபஜிக்கப்பட்டன

சஉ. அந்தரிந்திரிய நிக்கிரகமும்,பாஹியேந்திரிய நிக்கிரகமும், தபசும், சுசித்வமும், பொறுமையும், நேர்மையும், ஞானமும், அனுபவஜனிதக்ஞானமும், ஆஸ்திக்கியமும், (என்றல் தெய்வம் உளதென நம்புதலும்)இவைகள் பிரம்மசம்பந்தமாய் ஜனித்தகர்மம்.

சங. சூரத்துவமும், தேஜஸும், தைரியமும், சாமார்த்தியமும், யுத்தத்தில் ஓடிப்போகாமலிருக்கையும், கொடையும், சகலஜனங்களை ஆளுகையும், இவைக்ஷத்திரியஸ்வபாவத்தினல் ஜனித்தகர்மங்கள்.

சச. உழுதலும், கோபாலனமும், வணிகமும், வைசியசம்பந்தமான ஸ்வபாவத்தினல் ஜனித்தகர்மங்கள. சேவாரூபமான கர்மங்கள் சூத்திரனுக்கு ஸ்வபாவஜனித மானவை.

சடு. மனிதன் தன்ஸ்வபாவகர்மங்களில் ஆசக்தியுடையவனல் சித்தியடைகிறன். ஸ்வகீயகர்மத்தி லாசக்தியுடையவனல், எப்படி சித்தியடைகின்றனை அதைக்கேட்பாய்.

தைத்தரீயஉபநிஷத்து.

ஐந்தாவது - அநுவாகம்.

க 'ஹஓஃ' 'ஹுவஃ' 'ஹுவஃ'என்று இம்மூன்றும் வியாஹ்ருதிகள் (என்றல் மறைப்பொருளான=இரஹஸ்யமான நாமங்கள்,)ஆகவிருக்கின்றன. மஹாஸமஸ் புத்திராராகிய மாஹாசமஸ்ஸியர் 'ஹஹ' என்பதை நான்காவதாக, (வியாஹ்ருதி யாக) ப் பிரவசனஞ்செய்தார் (வெளியிட்டார்) ஆத்மா (ஜீவன்),—மற்ற † தேவர்களெல்லாம் (அதின)

† இவ்விடத்தில் "தெவதாஃ=தேவர்கள்" என பன்மையாக உரைத்திருப்பது அப்பிரம்மத்தின் உருப்புக்கள் பலவாதலால் ஒவ்வொன்றையும் (உருப்பையும்) ஒவ்வொரு தேவதையாக வர்ணித்திருப்பது அப்பிரம்மத்தின்ரூபத்தை விளக்கியதேயன்றி வேறு தேவர்களில்லைஎன்றும்கேவலம்உபசாரமாகவே 'தேவர்'என பன்மையாக உரைக்கப்பட்டதென்பது இதின்கருத்து. இக்கருத்துக்கிசைந்தவாறே பாஷ்யகாரரும் உரையுரைத் திருக்கின்றனர். 'தெவாஃ'என்னும் பதத்திற்கு 'இந்திரியங்கள்'என்பதும் பொருளாம்.

அங்கங்கள்,—'ஹ்ராஃ'என்பது இவ்வுலகம்,—'ஹ்ரவ்ஃ'எனபது ஆகாயம்,—'ஹ்ரவ்ஃ'என்பதுஅந்தலோகம் (என்முல்மேலுலகம்.)—

உ. 'ஹ்ஃ'என்பது ஆதித்தியன்,—அவ்வாதித்தியனுலேயல்லவாஎல்லாஉலகங்களும் விருத்திசெய்யப் படுகின்றன.—'ஹ்ஃ'என்பதுஅக்னி(க),'ஹ்ரவ்ஃ'என்பதுவாயு'ஸ்ரவ்ஃ' என்பதுஆதித்தியன்,—'ஹ்ஃ'என்பதுசந்திரன்,—அச்சந்திரனுலே யல்லவா ஜோதிஸ்களும் விருத்திசெய்யப்படுகின்றன.—'ஹ்ஃ' எனபது இருக்கு(வேதம்),—'ஹ்ரவ்ஃ' என்பது ஸாமம்,—'ஹ்ரவ்ஃ'யஜுஸ்,—

ஈ. 'ஹ்ஃ'என்பதுபிரம்மம்,—அப்பிரம்மத்தினுலேயல்லவா ஸகலமாகிய வேதங்களெலலாம் விருத்தசெய்யப்படுகின்றன.—'ஹ்ஃ'என்பது பிராணம்,—'ஹ்ரவ்ஃ'என்பது அபானம்,—'ஹ்ரவ்ஃ'என்பது வியானம்,—'ஹ்ஃ'என்பதுஅன்னம்,—அன்னத்தினுலேயல்லவாபிராணங்களெல்லாம்விருத்திசெய்யப்படுகின்றன.—(ஹ்ஃ-'ஹ்ரவ்ஃ'-'ஹ்ரவ்ஃ'-'ஹ்ஃ'-ஆகிய)இந்நானகு வியாஹ்ருதிகளும் நான்மடங்காகவிருக்கின்றன,—இந்நானகு வியாஹ்ருதிகளும் நான்மடங்கா யுரைக்கப்பட்டிருக்கின்றன,—இவைகளை எவன் (நன்ரூய்) அறிகின்றானோ அவனே பிரம்மத்தை அறிகின்றான்,—ஸகலமான தேவர்களும் அவன்பொருட்டு பலத்தை (மோக்ஷப்பிராப்திக்காக)கொண்டுவருகின்றனர்.

ஐந்தாவதநுவாகம்முற்றிற்று.

மநுநூல்.

உ - ம்அத்தியாயம்.

உ0க. (ஆசாரியனுடைய)பரிவாதத்தினால் (உள்ள தோஷத்தைச்சொல்வதால்) கழுதையாய்ப்பிறக்கின்றான்; (அவனை) நிந்திப்போன் (இல்லாததோஷத்தைச் சொல்வோன்) நாயாக ஜனிக்கின்றான்; அவ் வாசாரியனுடைய தனத்தை) அனுபவிப்போன் புழுவாகின்றான்; (அக்குருவினிடத்தில்) பொறாமையுடையவன் பூச்சியாகின்றான்.

உ0உ. (சிஷ்யனானவன்) அவனை (ஆசாரியனை) வெகுதூரத்திலிருந்துக்கொண்டாகிலும், கோபித்துக்கொண்டாகிலும், பெண்களினருகிலிருந்துக்கொண்டாகிலும், பூஜிக்கக்கூடாது. (பின்னுமவன்) வாஹனத்திலிருந்துக்கொண்டாகிலும், ஆஸனத்திலிருந்துக் கொண்டாகிலும், அபிவாதனம் செய்யத்தகாதவனாகின்றான்.

உ0ங. (சிஷ்யனானவன்) காற்றுக்கெதிராய் 'ஆசாரியனுடு சரியாய் உட்காரத்தகாதவனாகின்றான்; குருவுக்குக் கேளாமலிருக்கும்பொழுது ஒன்றையும் சொல்லத்தகாதவனாகின்றான்.

உ0ச. (சிஷ்யனானவன்)எருது, குதிரை ஒட்டகம், (முதலியவைகளாலிழுக்கப்படும்) வாஹனங்களிலும், மெத்தைகளிலும், உயரமான பாகைகளின்மேலும், பாய்களின்மேலும், பலகைக்கல்களின்மேலும், ஓடம், கப்பல் முதலியவற்றினிலேறிலும், ஆசாரியனுடன் உட்காரத்தகுந்தவனாகின்றான்.

உ0ஞ. தன்குருவுக்கு குரு ஸமீபத்திலிருக்கும்போது (சிஷ்யனானவன்) அவனை ஆசாரியனைபோலவே தானும் உபசரிக்கக்கடவான்; ஆசாரியனாலாக்கியாபிக்கப்பட்டாலன்றி (அப்பொழுது) தன்தாய்தந்தைகளை வந்தனம் செய்யத்தகாதவனாகின்றான்.

உ0சு. இம்மாதிரியாகவே வித்தையை உபதேசிக்கும் குருவிடத்திலும், சித்தப்பன்மார் முதலியவர்களிடத்திலும், தர்மத்தைத் தெரிவிப்போரிடத்திலும், ஹிதமுரைப்போரிடத்திலும், (சிஷ்யனிருக்கக்கடவான்.)

உ0எ. சிஷ்யனானவன் (தான்) ஆசாரியனை வணங்குவதுபோலவே நற்குணமுள்ள பெரியோரிடத்திலும் * பூஜைக்குத்தகுதியாக விருக்கின்ற குருபுத்திரர்களிடத்திலும், (சான்றோராகிய) குருவின்பந்தக்களிடத்திலும், நித்தியமாக வணங்கத்தக்கவனாவான்.

உ0அ. தன்னாசாரியகுமாரன் பாலனாகவிருந்தாலும் தனக்குச் சமானவயதுள்ளவனாயிருந்தாலும, எக்கியகர்மங்களில் அத்தியயனம்பண்ணிவைக்கசக்தியுடையவனாயிருந்தால் அவனை ஆசாரியனைப்போல் உப

* குருபுத்திரர்யென்பதால் சிஷ்யனுக்கதிகமானவயதுள்ளவும் அதிகயோக்கியதையுள்ளவும் இருக்கிற குருபுத்திரர்களைமாத்திரமே வந்தனஞ் செய்யவேண்டுமென வியாக்கியானத்தில் வேறுஸ்மிருதியின் அர்த்தத்தை வெளிப்படுத்தியிருக்கின்றது.

சரிக்கத்தக்கவனுவான்.

உ0க. (சிஷ்யனுனவன்)அபிஷேகம்செய்தல், அவன் (ஆசாரியன்) தின்னு மீந்த எச்சலைத்தின்னுதல், அவன்காலைக்கழுவுதல், முதலியவற்றை தன்னுசாரிய புத்திரனுக்குச் செய்யக்கூடாது.

உக0. (சிஷ்யனுனவன்) தன்குருபத்தினிகள் சுவஜாதியாகவிருந்தால் (ஒரே ஜாதியாகவிருந்தால்) ஆசாரியனுக்கு எவ்வகைபூஜை எவ்வகை உபசாரம் செய்கின்றுனோ அவ்வகைஉபசாரம்(அவர்களுக்குச்)செய்யத்தக்கவனுவான்; அவர்கள் அன்னியஜாதியாகவிருந்தால் எழுந்து வந்தனஞ் செய்யத்தக்கவர்களாகின்றனர்.

உகக. (தன்னுசாரியனுக்கு) எண்ணேதேய்த்தல், ஸ்னானம்செய்வித்தல்,, உடம்புதேய்த்தல், தலைமயிர்களை அலங்கரித்தல், முதலிய எல்லாவற்றையும், குருவின் மனைவியால் செய்யத்தக்கவையல்ல, (என்றல் இவ்வகைத்தொழில்களெல்லாம் சிஷ்யனே செய்யவேண்டுமென்பதாம்.)

உகஉ. யௌவனமுடையஆசாரியன் மனைவியானவள் இருபதுவயதுள்ளவும், விவேகியானவும், (அபராதன தோஷாதோஷங்களை அறிந்த) புருஷனுல் கால்களைத்தொட்டு அபிவாதனம் செய்யத்தகாதவளாகின்றுள்.

உகங. இவ்வுலகில் மனிதனை தூஷிப்பது ஸ்திரீகளின் இயற்கையாக விருக்கின்றது; ஆகையால் விவேகிகள் பெண்களின் இன்பத்தில் (சிங்காரசேஷ்டைகளால்) புத்தி மயங்குகிறதில்லை.

உகச. ஸ்திரீகளானவர்கள் காமம், குரோதம் முதலியவற்றிற்குளளாக்கும் மூடனையும், வித்துவானையும் (என்றல் இரிஷிகளையும்) துன்மார்க்கத்தில் செல்லும் படிசெய்ய சக்தராகின்றனர்.

உகடு. ஆகையால் ஒருவனும் ஒருவருமில்லாதிருக்குமிடத்தில் (ஜனமில்லாமல் தனியாயிருக்குமிடத்தில்) தாயுடனும் உடப்பிறந்தாளுடனும், பெண்ணுடனும், உட்காரக்கூடாது; ஏனெனில் (தமோகுணமுள்ள) இந்திரியக்கூட்டமானது அதிக பலமுள்ளது, (அது) வித்துவானையும் (என்றல் சாஸ்திரங்கள் கற்றுணர்ந்தவனையும்) தனக்குள்ளாக்கிக்கொள்ளுகிறது.

உகசு. யௌவனமுள்ள புருஷனுனவன் யௌவனமுள்ள குருபத்தினிகளை வந்தனம் பண்ணும்பொழுது சாஸ்திரப்படிக்கு 'நான்' என்று நாமத்தைச்சொல்லி பூமியில்எந்தப்பக்கத்திலாகிலும்வந்தனஞ் செய்யத்தக்கவனுவான்.

உகள. (சிஷ்யனுனவன்) தேசாந்தரம் போய்வந்தஉடனே தனது குருபத்தினியின் பாதத்தைத்தொட்டு தினந்தோறும் அபிவாதனம்செய்யவேண்டியது. அப்படிக்கிச் செய்வதில் ஸத்புருஷாளுடையதர்மத்தைக்காக்கவேண்டும்.

ககஅ. மண்வெட்டியினல் பூமியை வெட்டுவோன்ஜலத்தைஎப்படிஅடைகின்றுனோ அப்படியே குருவிடமிருக்கும் வித்தையை மிகவணக்கத்துடன் உபசரிப்போனடைகின்றுன்.

ககக. (பிரம்மசாரியானவன்) மூடனுகவிருந்தாலும் ஜடையுடைத்தாஇருந்தாலும், அலலது ஜடையைப்போன்ற குடிமியை யுடையவனுயிருந்தாலும், அவன் கிராமத்தில் வஸிக்கும்பொழுதும், தூங்கும்பொழுதும், ஒருபொழுதும், சூரியன்உதயமும், அஸ்தமானமும், ஆகத்தகாதவனுகின்றுன்.

மாதாவாச்சல்லியம்.

மாரியென்னு மோர் தொத்துவியாதி பிரபலமாயிருந்த வோர்காலத்தில் அடியில் குறிக்கப்படும் விசேஷம் நடந்ததாக தெரியவருகின்றது. அசாக்கிரதையினுலோ அல்லது வியாதியின் கோரமான தீவரத்தினுலோ, கர்கி என்னு மொருகிராமத்தில், ஒரு குடும்பத்திலுள்ள சிறியவர்களும் பெரியவர்களுமாகிய யாவரும், முறையே இறந்து போனர்கள். இதற்குச் சமீபத்தில் வாசஞ் செய்துக்கெண்டிருந்தவொருகுடியானவன் மனைவியும், இரண்டுஅண்குழந்தைகளுக்குத் தாயுமாகிய ஒருஸ்திரீயானவள், அன்றிரவில் தனக்கு காச்சல்வரக்கண்டனள். மறுநாள் காலையில் காச்சல் விசேஷமாய் அன்று சாயந்திரம், மரணத்துக்கேதுவாகிய அம்மைகண்டது. அவள் புருஷன் வேலைசெய்யும்பொருட்டு நெடுந்தூரம்போய் தன்சம்சாரபோஷணைக்காக வாரமுழுமையும் வேலை செய்து கடையில் கிடைத்ததைக் கொண்டு வரவேண்டியதாயிருந்தமையால், அவன் இச்சமையத்தில் வீட்டிலில்லாமற் போய்விட்டான். அயல்வீட்டாருக்கு நேரிட்டதன்பத்தை யுன்னி திகிலடைந்தவளாய், தன்குழந்தைகளின்மீது வையற்றபாசமுடையவளாகி, தன்வியாதி தன்பிள்ளைகளை ஒருவேளைபற்றுமோவெனபயந்து அவர்களைத் தொடரா

மலிருக்கச்செய்ய நிச்சயித்துக்கொண்டவளாய், தன்வியாதி அவர்களைப்பற்றுமுன்பாகவே, தன் வீட்டைவிட்டு அப்புறம்போய் வேறெங்கேயாவது இறந்துபோக தைரியத்தோடும்தீர்மானஞ்செய்துக்கொண்டாள். அவ்வாறே அவர்களை ஒருவீட்டினுள்பூட்டி, அவர்களைக்காப்பற்றும் பொருட்டு, தான் இறக்கும்போ தவர்களைக் கண்ணுரக்கண்டு கட்டியணைக்குஞ் சுகத்தையும் பாராட்டாமல், தான் போட்டிருந்த வஸ்திரங்களையும் படுக்கையையும் எடுத்துக்கொண்டு, ஓடிவந்து தெருக்கதவை சாத்திக்கொண்டு துக்கத்தோடு பெருமூச்சிட்டுக்கொண்டு போய்விட்டனள். ஆயினும், அவளுடைய பெரியகுழந்தை கதவு சாத்தப்பட்ட சத்தம்கேட்டு சாளரத்தண்டையில்வந்து, அவ்வாறே டிக்கொண்டிருந்ததாயைப்பார்த்து "சுகமாய்ப்போய்வா" வெனமெல்லியகுதலைச்சொற்களோடுவந்தனஞ்செய்தது. இதைக்கண்ட மற்றொருகுழந்தையும், அவ்வாறே தலைசாளரத்தின் வெளியிலிட்டு வந்தனஞ்செய்தது. இதைக்கண்ட தாயானவள் மிகவருந்தி, அப்புறஞ்செல்லவும் மனம்வராமல் திரும்பவும்மனம்வராமல் நின்றவிடத்திலேயேநின்று மனந்துடிக்கதத்தளித்தனள். கடையில்தன் பிள்ளைகளைக் காக்கவேண்டுமென்னுங் கருத்தேமேலிட்டு, அவர்களைவிட்டுநீங்கி இருகண்களிலும் ஜலம்ஆறுகப்பெருக, இவள்துக்கத்தையறியமாட்டாதபிள்ளைகள்செய்யும்வந்தனங்களைப்பொறுக்கமாட்டாமல், தான் உத்தேசித்த இடத்துக்குப்போய், தன்பிள்ளைகளையும் புருஷனையும் காக்கும்படி தன்னைச் சூழவிருந்தோரை பிரார்த்தித்து இரண்டொளுக்குள் இறந்துபோனாள்.

ஆதரவற்ற தன் குழந்தையைக் காக்கும் பொருட்டு, தாயானவள் எவ்வளவபாயத்தை தான் மேல்போட்டுக்கொண்டு தான் கருதிய காரியத்தைச் சாதிக்கமாட்டாள்? பிலோதீவுகளிலுள்ள டிங்காலீன் என்னுங் கிராமத்தில் ஒருகுழந்தை பொற்கழுகு என்னப்படும் பெரும்பகுதியால் எடுத்துக்கொண்டுப்போகப்பட்டது. தன்குழந்தையை மீட்டும்பொருட்டு, அதன் தாயானவள், இதுவரையிலும் ஒருவராலும் ஏறப்படாத செங்குத்தான மலைச்சிகரத்தைத் தொத்தியேறி, அக்கழுகின் கூண்டில் தன் குழந்தையைத் தேடச்சென்றனள். விடா முயற்சியாலும், தைரியத்தாலும், கடையில் அக்கூண்டைக் கண்டுபிடித்தனள். ஆயினும், அவள் தௌர்பாக்கியத்தால் அவளவ்விடத்தை யடைவதற்கு முன்பாக அவளழகிய குழந்தை மரித்தது. இப்பெருங் கழுக்கள் வாசஞ்செய்யும் ஆர்சனிதீவுகளிலும், இவ்வித செயலொன்று நேரிட்டது. ஆனால் இச்சந்தர்ப்பத்தில் தாயின் முயற்சி வீண்போகவில்லை. பயங்கரமான மரணத்தினின்றும்; தன்குழந்தையை மீட்டுக்கொண்டவளாய் தாயானவள் ஆனந்தக்கடலில் மூழ்கினவளானாள்.

பேகன்வியாசம்.

மூடபக்தியைப்பற்றியது.

கடவுளைப்பற்றி தகைமையற்ற மதமுண்டாயிருப்பதிலும், யாதோரபிமதமும்இல்லாமலிருப்பதுசிதம். ஏனென்றால்ஒன்று அவநம்பிக்கையும் மற்றது அலக்ஷியமுமாகும். நிஜமாகவே மூடபக்தி கடவுளுக்கு நிந்தையாகும். இதைப்பற்றி புளூடார்க்கு தக்கபடி உரைத்தனர். கவிகள் சனியைப்பற்றி பேசுவதுபோல், 'புளூடார்க்கென்பவனொருவனிருந்தான், அவன் தன்பிள்ளைகளைப்பிறந்தஉடனேவிழுங்கப்பட்டவன், என்று மனிதர் பிரஸ்தாபிப்பதைப்பார்க்கிலும், புளூடர்க்கென்னும் மனிதனே இல்லையென்று சொல்வது மிகவும்விசேஷம், கடவுளினிடத்து ஆரோபிக்கப்படும் நிந்தைமிகப்பெரிதாயிருப்பதுபோலவே, மனிதரின்கண் அபாயம்மேலிடுகின்றது. நாஸ்திக்கியத்திலும், மனிதருக்கு புத்தி, சாஸ்திரவிசாரம், இயல்பாகிய விஸ்வாசம், தருமங்கள், கீர்த்தி, இவைகள் மீந்திருக்கின்றன. இவைகள் வைதிகமில்லாதிருந்தும், வெளியரங்கமான் நீதிமார்க்கத்தில் நடத்தக்கூடும். மூடபக்தியோவெனில் இவைகளையெல்லாம் கீழ்ப்படுத்தி, மனிதருடைய இருதயங்களை முழுமையும் வலையின்றி ஆளுகின்றது. ஆகையால் நாஸ்திக்கியம் சமஸ்தானங்களை எப்பொழுதும் கலக்கியதில்லை. ஏனென்றால் அஃது மனிதரை முன்னேறுக்கவிடாமல் தமதிருப்பை வெறுக்கச்செய்கின்றது; மேலும் அகஸ்டஸீசர் என்போன் காலத்தைப்போல், நாஸ்திக்கியத்தைச்சார்ந்தகாலம் அமைதியுள்ளதாயிருந்தன. மூடபக்தியோவெனில் சகலஇராஜாங்கங்களையும் கெடுக்கானின்ற, பிரதானகவர்ச்சியைப் புகட்டுகின்றது.

மூடபக்திக்குக்காரணம் ஜனங்களே, மேலும் எல்லா மூடக்கொள்கையிலும், புத்திமான்கள் புத்தியீனரைப் பின்தொடர்ந்து செல்லுகின்றனர்.

* * *

மனோரம்மியமாய் விஷயவியாபாரங்களைப்பற்றியசடங்குகளும் கர்மங்களும், வெளியரங்கமாகி ஆரவாரமுடைய வைதிகவேஷமிருதியும், திருச்சபையை ஆழ்த்திவிடின

றபுராணங்களினிடத்துள்ள விசேஷ பக்தியும், தம்முடைய ஆத்மிக அபிவிருத்தியின்பொருட்டும் சம்பாதிக்கவேண்டிய தானபொருட்டும் குருக்களுமார்களைச் செய்யும் சூதுகளும், விபரீதங்களுக்கும் புதுமைகளுக்கும் இடங்கொடுக்காகின்ற வழக்கமாகிய (செப்தகையில் எவ்வளவுதூரம் தோன்றியபோதிலும்) நல்லெண்ணமுடையோரென (சுலபமாய்நம்பி) பாராட்டுவதும், ஆதாரமற்ற பலஆரோபிதங்களுக்கிடங்கொடுக்கும மனுஷிடவியாபாரங்களின (உபமானத்தைகொண்டு) தெய்வீகமான காரியங்களையறிய செய்யப்படும்முயற்சியும், கடைசியில், நடந்தன்பமுங்கேடும் பரியந்தகாரிகமற்றகாலமும் இவைகளேமூடபக்திக்குக்காரணமாயிருக்கின்றன. மறைவற்ற மூடபக்தியானது விகாரமுள்ளது. ஏனெனில வாலில்லாக்குரங்கானதுஎவ்வளவுமனிதனைப் போன்றிருக்கின்றதோ அவ்வளவும விகாரமுள்ளதாய்தோற்றுகின்றது. அவ்வாறே மூடபக்தியும் பாரமார்த்திகத்தைப்போன்றிருப்பதினால் அதிகவிகாரத்தையடைகின்றது; சுகரமான மாம்சம் சிறுபுழுக்காராய் கெட்டிப்போவதுபோல், சீரான ஒழுக்கங்களும் ஏற்பாடுகளும், அனேகசிறு (மூடச்) சடங்குகளாய்மாறிப் போகின்றன.

(நிர்விவாதமாய்) அங்கீகரிக்கப்பட்ட மூர்க்கிய மூடக்கொள்கைக்கு வியதிரேகமாய் நெடுதூரஞ் செல்வதேஉத்தமமென்று மனிதர்நினைபதினால், மூடபக்தியை நீக்குவதிலுமோர்மூடபக்தியுண்டு. ஆகையால், (தொடிய பேதிமாத்திரைகள் செய்வதுபோல்) தீமையைநீக்குவதோடு, நன்மையையும் நீக்கவிடாமலிருக்க சாக்கிரதைக் கொள்ளவேண்டும். இவ்வாறு (தீமையோடு நன்மையையுங்களைந்துவிடுதல்) (பாமர)ஜனங்களே தம்மை சீர்திருத்த முயலுகையில் பெரும்பாலும் சம்பவிக்கின்றது.

அமிர்தவசனி.

ஸ்திரீகளுக்குரிய தருமங்களிலெல்லாம் விசேஷித்த தருமம்பதிவிரதாதருமமாம். இதை நம்முன்னோர்கள் மதித்து, பல விதத்தில் புகழ்ந்து பிரஸ்தாபித்திருக்கிறார்கள். அவர்கள் இந்தப்பதிவிரதா தருமத்திற்குச் சொல்லியிருக்கிற உயர்ந்த இலக்ஷணங்களையெல்லாம் எடுத்து, இந்தச் சிறு பத்திரிகையில் விவரமாகச் சொல்ல எங்களாலாகாது. அவைகளில் அனேகம் எங்களுக்கே தெரியாது. ஆயினும், தெரிந்தவரையில் எங்கள் சகோதரிகளுக்குச சொல்லத் துணிகிறோம்.

சிலர் புருஷனைத்தேவனுக்கப்பாவித்துத்தேவனிடத்தில் செலுத்தவேண்டிய பக்தியைப் புருஷனிடத்தில் செலுத்துகிறார்கள். இந்த விபரீதத்தை அனேகர் பதிவிரதா தருமமாகக் கொள்ளுகிறார்கள். இது அக்கிரமம். நம்மை இப்புவியில் படைத்தருளுகிற தேவன் சர்வ வல்லமையுடையவர்—சர்வதயாபரர். இப்புவியிலுள்ள யாவற்றையும் படைத்தவர் அவர். ஸ்திரீகளாகிய நம்மையும் படைத்தாளுகிறவர் அவரே. அவருடைய சங்கற்பத்தால் நமக்குவாய்த்திருக்கிறபுருஷனையும்படைத்து நடத்துகிறவர் அவரேயன்றி வேறல்ல. இப்படியிருக்க, சிஷ்டிகளாகிய புருஷனைத் தேவனுகவாவது, அல்லது தேவனுக்குச் சமானமாகவாவது பாவிப்பது விபரீதமேயன்றி வேறல்ல. ஆத்ம கோடிகளுக்கெல்லாம் ஆத்ம நாயகராக எழுந்தருளியிருக்கிற தேவனுக்கே நம்முடைய இருதய கமலங்களில் முதன்மையான ஆசனத்தை இயற்றவேண்டும். ஸ்திரீகள் விசேஷமாய்த் தேவனையே முதல்பணிந்து வழிபடவேண்டும். தேவனுடைய பயமும், பக்தியும், ஸ்திரீகளுடைய இருதயத்தில் உதித்திருக்கவேண்டும். இதைக் கல்விகற்றஸ்திரீகள் மறக்கலாகாது. தெய்வபக்தி உண்டானால், தேவன் நமக்கனுக்கிரகித்திருக்கிற ஆசீர்வாதங்களிலெல்லாம் சிறந்த ஆசீர்வாதமாகிய புருஷரிடத்தில்செலுத்தவேண்டிய பக்தியும், நேசமும் தன்னிச்சையாய்உண்டாகும். இவ்வாறு தெய்வபக்தியினால் புருஷரிடத்தில் ஸ்திரீகளுக்குண்டாகிற சுத்த பக்தியும், நேசமுமே பதிவிரதாதருமத்திற்கு முக்கிய ஆதாரமாகும்.

நமக்குத் தேவசங்கற்பத்தால் வாய்த்திருக்கிறபுருஷர்குரூபிகளானாலும், நோயாளிகளானாலும், கல்விகற்காதவர்களானாலும், அவ்டதரித்திரரானாலும், வயது தளர்ந்தவர்களானாலும், "குலமகட்கழகு தன்கொழுனனைப்பேணுதல்"என்று பெரியோர் சொல்லியதை உணர்ந்து. "கல்லென்றாலும்கணவன், புல்லென்றாலும்புருஷன்" என்று அவர்களைச்சிறிதெனும் அவமதியாமல், மேன்மையாய்ப் பாவித்து, நேசித்து, கீழானந்து, நடப்பதுநம்மேல் விழுந்தகடமையாம்.

"தாய்க்குப்பின்தாரம்"என்று பெரியோர்சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆகையால், புருஷருக்குவேண்டிய பாதபணிவிடைகளையெல்லாம் குறைவின்றி, சலிக்காமல் செய்து, உபசரிக்கிறதுமன்றி, அன்புள்ளதாயைப்போல் இனியபோஜன பதார்த்தங்களால் போஷிக்கவேண்டும். புருஷர் தங்கள் உத்தியோக சாலைகளிலிருந்து திரும்பிவருகி

றவேலையை அறிந்து, வீடி வாசல்களை யெல்லாம் பெருக்கி, சுத்திசெய்து, வீட்டிலுள்ள சாமான்கள் அனைத்தையும் அதன்அதனிடத்தில் யிருக்கப்பார்த்து, தலையொருவேஷம் உடம்பொருவேஷமாயிராமல், சுத்திசெய்துகொண்டு, வீட்டிலுள்ள ஆடையாபரணங்களைத் தரித்துக்கொண்டு, அவர்கள்வருகையை எதிர்பார்த்திருக்கவேண்டும். அவர்கள் வருகிறஜாடையையறிந்து, புன்சிரிப்போடு அவர்களையெதிர்கொண்டு சந்தித்து, கைகால் அலம்பிக்கொள்ள ஜலம்கொடுத்து, அவர்கள் ஆயாசத்தை நீக்கத்தக்க ஆகாரம்பரிமாறி, உபசரிக்கவேண்டும். அண்டை அயலாருக்கும் நமக்கும் உண்டான சண்டைசச்சரவுகளைப்பற்றியாவது, அல்லது, நமதுசமுசாரவாழ்க்கையில் உண்டாகிற வருத்தங்களைப்பற்றியாவது அவர்கள் இனைப்பாதிருக்கையில் முறையிட்டுஞ்சலப் படுத்தலாகாது.

புருஷர் முன்கோபிகளாயிருந்தாலும் நம்மாலானமட்டும் அவர்கள் கோபத்திற்கிடங்கொடாமலிருக்க பிரயத்தனப்பட வேண்டும். நெருப்பைக் குளிர்ந்த சலம் தணிக்குமல்லவா? ஒருவேளை அவர்கள் அநியாயமாய் நம்மேல் கோபித்துக் கடிந்துகொண்டாலும், நாமுங்கூட கோபியாமல் மௌனமாயிருந்து, ஹிதமாய்ப்பேசி, அவர்கள்கோபத்தைச் சாந்திசெய்யவேண்டும். "பெண்டிற் சழகெதிர் பேசாதிருத்தல்" என்றுபெரியோர்விதித்திருக்கிறார்கள். புருஷர்மூர்க்கமாய், நம்மைச் சீர்மார்படித்தி திட்டி அடிக்கும் பொழுது அவர்களுக்கருகில்சென்று, "கை எப்படி ஓங்கின்றதோ, பாதம்எப்படிவலிக்கின்றதோ என்றுஅவர்களுக்குத்தஞ்சொல்லி, அவர்கள்கோபத்தை தணிக்கவேண்டும்" என்று சிலர்விதிக்கிறார்கள். இப்படி விதிக்கிறவர்கள் மனுஷகத்துவத்திற்கு இயல்பாயிருக்கிற பலவீனங்களைச் சிறிதேனும் அறியார்கள். இவர்கள விதித்தவண்ணம் நடந்துகாட்ட இவர்களால் ஆகுமா? ஆகாதே! ஆயினும், புருஷருக்குக் கோபம் உண்டாகையில், "ஆறுவதுசினம்" என்று நமக்கு ஔவை சொல்லிய புத்தியைக்கேட்டு, அத்திரப்படாமல் அடக்கமாயிருந்து, அவர்களுக்குப் பிரயமான உபசாரவார்த்தைகளைச் சொல்லப் பிரயாசப்படவேண்டும்.

நம்முடைய புருஷரின் குற்றங்களையும், பலவீனங்களையும்பற்றி பிறரோடு பிரஸ்தாபிக்கலாகாது. "தூற்றும்பெண்டிர் கூற்றெனத்தகும்" என்கிறார்களே. புருஷருடையதுர்க்குணங்களைப்பற்றிச்சொப்பனத்திலும் நினைக்கலாகாது. அவர்களுடைய நற்குணத்செய்கைகளை மேன்மைபாராட்டி, அவர்களை இருதயபூர்வமாய்க் கனம்செய்யவேண்டும். "மனைவி புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்" என்றும், "மனைவிகளே! உங்கள் சொந்தப்புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்" என்றும் தேவன் கட்டளையிடுகிறார்.

சில புத்தியற்ற ஸ்திரீகள் ஆடையாபரணங்களைப்பற்றிப் புருஷருக்குத் தீராத சங்கடங்களை விளைவிக்கின்றார்கள். பாக்கியவந்தர்களாயிருக்கிற அயலார்கள் என்னென்ன ஆபரணங்களை அணிந்துகொண்டிருக்கிறார்களோ, என்னென்ன ஆடைகளைத் தரித்துக்கொண்டிருக்கிறார்களோ, அவைகளையெல்லாம் தங்களுக்கும் வாங்கிக்கொடுக்கச்சொல்லி, பீடிக்கிறார்கள். கடன்பட்டாவதுகொஞ்சத்திற்குக் கொஞ்சம் வாங்கிக்கொடுத்தாலொழிய திருப்தியடையார்கள். நாம் இந்தப் பேதயரைப்போல நடக்கலாகாது. நம்முடையபுருஷர் தங்கள் நேர்நிர்வாகத்திற்கேற்க எதையெதைக் கொடுத்திருக்கிறார்களோ, அவைகளைப்பெற்றுக்கொண்டு, நன்றியுள்ளவர்களாய்த் திருப்தி அடைந்திருக்கவேண்டும். நம்மிலும் பாக்கியவந்தர்களாயிருப்பவர்களைப்பார்த்து, பெருமூச்செறிந்து, வீண்வருத்தப்படுவதைவிட்டு,

தம்மின் மெலியாரை நோக்கித்த
மதுடமை அம்மமா பெரிதென்று
அகமகிழ்க.

என்று பெரியோர் சொல்வதைக்கவனித்து நடக்கக்கடவோம்.

பதிவிரதையானவள் தான் தரித்துக்கொண்டிருந்த ஆபரணங்களை எல்லாம் துறந்திருந்தாலும் மாங்கல்யத்தைமாத்திரம் ஓர்இலைப்பொழுதேனும் துறந்திருக்க மாட்டாள். அதைபபோலவே, தன் தாய்தந்தையர் முதலிய உறவினரை எல்லாம் விட்டு நீங்கிலும், தன் நாயகனைமாத்திரம் விட்டு நீங்காள். அன்றிற்பேடையும் அல்லவா தன்சேவலைவிட்டுப் பிரிந்திருக்கச் சகிக்காமல் இறந்துபோகின்றது. அண்டை அயல் வீடுகளுக்கு அடிக்கடிபோவதும், பரபுருஷர்களுக்குமுன் நின்று பல்லைக்காட்டி நகைப்பதும், சரசபரிகாசங்கள்செய்வதும் பதிவிரதைக்குதகாத காரியம். "சிரித்தையோ சோலைக்குலத்தையோ" என்கிற பழமொழியைக் கேட்டிருப்பீர்களே, தன் வீட்டிலும் இடிஇடித்தாலும்போல் உரத்த சத்தத்தோடு பேசாமல் இனிய குரல் உடையவளாய் மிருதுவான வசனங்களை வசனிப்பவளாய் இருந்து, தெகிளன்று பிச்சைக்கு வந்தவர்களுக்கெல்லாம் "இல்லை" என்ற இடத்தில் பல்லியும்சேராது;

என்பதையுணர்ந்து, இல்லையென்று சொல்லாமல், குளிர்ந்தமுகத்தோடுதனலானவரையில் பிச்சையிட்டு உபசாரவார்த்தைகளைச் சொல்லி அனுப்பிவிடுவாள்.

பதிவிரதையானவள், உத்தியோகசாலையிலிருந்து தனதுடைய நாயகன் வீட்டிற்குத் திரும்பிவந்தவுடனே, வீண்வார்த்தைகளையாடி அவரைவருத்தப்படுத்தாமல் உபசரித்துப் பயன்படத்தக்க விஷயங்களைப்பற்றிச் சம்பாஷிப்பாள். நல்லபுத்தகங்களைத் தனக்கு வாசித்து, அவைகளின் கருத்தை எடுத்துச் சொல்லச்சொல்லிக் கேட்டுக்கொள்வாள். வீண்டம்பமான காரியங்களைத் தன் புருஷன் செய்யவெண்ணினால், இனிய வார்த்தைகளைச் சொல்லி மறுத்து, வீணில்செலவாகிற பணத்தைத் தருமவிஷயங்களிற் செலவிடச்சொல்லி வேண்டிக்கொள்வாள். யோபுவென்பவன்இருந்ததுபோல அந்தகருக்குச்சண்ணுகவும், முடவருக்குக்காலாகவும், ஏழைகளுக்குப் பிதாவாகவும் இருந்து, பரஜனோபகாரியாய் நன்மைகளைச் செய்வதில் மிகுந்த வைராக்கியமுடையவனாயிருக்கும்படியாகவும் கேட்டுக்கொள்ளுவாள்.

சென்றநாலிந்தமாதத்துஅமிருதவசனியில் பதிவிரதாதருமத்தைப்பற்றிஎங்களுக்குத் தோன்றிய சிலவற்றை எழுதியிருந்தோம். அவைகளைக்கவனமாக வாசித்துச் சிந்தித்தவர்கள் பதிவிரதாதருமம் இன்னதென்றுஒருவாறு அறிந்திருப்பார்கள்; இதுவரையில் பதிவிருதா தருமத்திற்குரிய லட்சணங்களில தாழ்ந்த சிலவற்றைதான் எடுத்துச்சொன்னோம். இப்பொழுது மேற்படி தருமத்திற்கு ஆதாரமாயிருக்கின்ற ஒருவிசேஷித்த லட்சணத்தைப்பற்றிக் கொஞ்சம் எழுதுகிறோம்.

பதிவிரதையானவள் அதிகாலையிலெழுந்ததன் சமுசாரவிருத்திக்கு வேண்டிய காரியங்களைச் செய்துகொள்ளப் பிரவேசிப்பதற்குமுன் சர்வகாருண்யராகிய தேவனைத் தியானித்து வழிபட்டு, அவர் விதித்தவழியில்நடக்கவும், தீர்மானித்துக்கொள்வாள். எந்தவேலையில் பிரவேசித்தாலும்,எவர்களோடு வார்த்தைசொன்னாலும், தேவனுக்குப் பயந்தும், அவர்மகிமையை விரும்பியுமேநிற்பாள். தான்குணப்பட்டு நன்னெறியில் நடக்கப் பிரயத்தனப்படுவதுமன்றி, தன்னோடு வாழ்கிறவர்களையும், அண்டை அயலாரையும் சீர்ப்படுத்தத் தேடுவாள்; முக்கியமாய்த் தன் சொந்தவீடு தேவாலயத்தை ஒத்திருக்கச்செய்வாள். தன்கணவனும் இவளுடைய நன்னடகைகளையும், பக்திவைராக்கியத்தையுங்கண்டு, களித்துத் தேவனை வழிபடும்படியாயும் தூண்டுவாள். மனைவிகளே! உங்கள்புருஷர்களுக்குக் கீழ்படிந்திருங்கள். அப்பொழுது அவர்களில்யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாமல் இருந்தால், பயபக்தியோடுகூடிய உங்கள்கற்புள்ள நடக்கையை அவர்கள்பார்த்து, போதனையின்றி மனைவிகளின் நடக்கையிலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள். மயிரைப்பின்னி, பொன்னுபரணங்களையணிந்து, முக்கியமான வஸ்திரங்களையுடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாலமையாகிய அலங்கரிப்பாயிருக்கின்ற சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கின்ற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது. அதுவே தேவனுடைய பார்வைக்கு விலையேறப்பெற்றது என்கிற வேதவாக்கியங்களைத் தியானித்துக்கொண்டு, இரவும்பகலும் தன்கணவனேயம், தன்பிள்ளைகளையும், தன்சுற்றத்தாரையும், தன் அண்டைஅயலாரையும் தேவன்ஆசீர்வதிக்கும்படி பிரார்த்தித்து, தானும் தனபுருஷனும் இம்மையில்கூடி தேவனை வழிபடுகிறதுபோலவே மறுமையிலும், தங்கள்பகவானுடைய சந்நிதானத்தில் அவரைப்பணிந்து வாழத்தக்கவரஞ்சுதக்கவும் வேண்டிக்கொள்வாள். இந்தக குணாதிசயங்களையெல்லாம் உடையவளே பதிவிரதையாவாள்.

நிருபம்.

ம - ரா - ரா - ஸ்ரீ. தத்துவபோதினியின் கர்த்தரவர்கட்கு, வந்தனம்.

ஐயா.

இவ்வுமையம்பேட்டையில் வழக்கப்படி மாசுக்ஷ உருவே கூடிய வேதமாஜசபையில், ம - ரா - ரா - ஸ்ரீ. டில்லரிட்டு முனிசியு சை. காசிவிசுவநாதமுதலியாரவர்களால் செய்த உபன்னியாசங்களை இதற்கடியில் எழுதுகிறேன். அவற்றைத் தங்கள்பத்திரிகையிற் பிரசுரஞ்செய்யக் கோருகிறேன்.

அஃதாவது.

சோதரர்களே சென்றவாரத்திற் பிரம்மத்தைக்குறித்துச் சொல்லப்பட்டதல்லவா? இப்போது அதன் மூன்றுசத்துவங்களிலொன்றுகிய பிரமமாவைக்குறித்துச் சொல்லுகிறேன்.

பிரம்மா பிரம்மத்தின் சிருஷ்டி சத்துவத்திற்கு உருபகமாகச் சொல்லப்படுகிற ஒரு

மூர்த்தியாகவிருக்கிறார். காப்பதத்துடைப்பா கிய பெரிய சத்துருக்களின் பேர்களைப்போ ல அல்லது மற்றச்சில்லறாத்தேவர்களுடை ய பேர்களைப்போல அல்லது அவதாரங்களி ன் பேர்களைப்போலப்பிரம்மாவுடையபே ர் மிருதியும் சாதாரணமாய் வழங்கப்படுக றதில்லை. பிரம்மாவின் விக்கிரகம் மற்றத் தேவர்களுடைய கோவில்களில் அபூருவமா ய்ச் செய்துவைக்கப்படுகிறதுண்டு.

அவருக்குமைவேதனம் பிரார்த்தனைவண க்கத்தோடும் உருக்கத்தோடுஞ் செய்யப்ப டுகிறதுமுண்டு. விட்டுணு, சிவன், இவர்களு க்குண்டாயிருப்பதுபோல இவருக்கும் அவ தாரங்களுண்டு. ஆனால் இவருக்குப் பிரத்தி யேக கோவில்களில்லை. அவருக்கென்று ஏ ற்பாடான கிரியாசடங்குகளுமில்லை. சிருஷ் டிகாரியம் கடந்துபோயிருக்கின்றது. பிரம் மத்தின் சிருஷ்டி சத்துவத்திற்குச் சக்தி னிலைமையின் மீடிப்பில் அல்லது ஒழிபில் அ ல்லது மறறொருவிதமாகச் சொல்லுமிடத் தில் பிரபஞ்சத்தின் காப்பில் அல்லது அழி ப்பில் அடுத்த சம்பந்தமில்லை. குறித்த ஒரு காலத்தில் சிருஷ்டிசத்துவம் செய்கைக்கு மறுபடியும் வேண்டியதாயிருக்கிறது. இரட் சிப்பு சத்துவமும், அழிப்பு சத்துவமுமாத் திரம் பக்தர்களுடைய கோரிக்கைகளையும், பயங்களையும் எழுப்புகின்றன. சாதாரண கோட்பாட்டின்படி சங்காரமென்பது மற் றொருவடிவமாக மறுபடியும் உண்டாவதா கவிருக்கின்றது.

சிருஷ்டியென்பது அசித்துப்பொருளின தது முன்னிருந்த வடிவத்தின் வேறுபாடாக விருக்கின்றது. சிருஷ்டி சத்துவம், சங்கார சத்துவத்தைப்போலவே திருஷ்டாந்தக் கு றைவாயிருந்தாலும் மாறுதடப்பில் இருக் கின்றது. அப்படிப்பட்டதொழில் அதன்கா ரியசித்தியில் தவறுததாக விருக்கின்றது. சி ருஷ்டிக்கிற சத்துவம், அல்லது குணம், அ ழிக்கிற சங்காரியைக் காட்டும் மூற்றுதவி னைவிடக் குறைவான பத்துவைராக்கியத்தோ டும், குறைவான சிறப்போடும், உருக்கத் தோடும்பிரார்த்திக்கப்படுகின்றது.அவர்களு டைய சமமானதொழிலும், மறுதொழிலு ம், ஒருவிதக் குணவண்ணியோன்னியத்தை விளக்குகின்றது. பிரம்மாவும், சிவனும், சில வேளை அவரே இவர் இவரோ யவராகச் சா திக்கப்படுகிறார்கள். ஆகிலும், பலசமயங்க ளில் நேர்மிரோதமாகவும் பகையோடும்வா திக்கப்படுகின்றது. பிரம்மாபடைக்கிறார் சி வன் தடைக்கிறார், துடைக்கிறதெனபது ஒ ருவடிவத்தை மற்றொருவடிவமாகப் படை ப்பதேயாம். இதனால் சிவனும் பிரம்மாவும் கலத்தலை யுடையவர்களா யிருக்கிறார்கள்.

ஆகையால் புராணங்களில் பிரம்மா பிர ம்மத்தின் அல்லது மேலானவஸ்துவின் மு சணங்களை உருபகமாகச் செய்யப்பட்டி ருக்கிறதும் மூர்த்தங்களில் முதன்மூர்த்தியா யிருக்கிறார். அவர் தேவர்களில் தலைமையா னவராகவும், பிரபஞ்சத்தைப் படைக்கிறவ ராகவும் உலகத்தைப் பாலனஞ்செய்கிறவ ராகவுமிருக்கிறார். பாலனஞ்செய்கிற தன் மையால் விட்டுணுவுக்கு ஒத்திருக்கிறார். ச டசித்து சாத்திரத்தில் அவர்சாதாரணமாய் சடபதார்த்த பாவனுருபகமா யிருக்கிறார். அவனிலிருந்து எல்லாவஸ்துகளுமுண்டாகி ன்றன. அவரில் பிரபஞ்சம் முன்னுண்டாயி ருந்திருத்தலையுடையதாயிருக்கின்றது. ஒரு முகிழ்முல்லைவித்தில், அலவிருக்கும் அடங்கயி ருப்பதுபோலவும், வெளிப்பட்டு விரியக்சா த்திருக்கிற விதையில் கனியடங்கியிருப்பது போலவும் பிரம்மாவில் எல்லாச்சட வடிவு களும் மடங்கியிருக்கின்றன. அவற்றின்மூலை துளிர்மூல முதலாகியவைகள் ஒருமிக்க அ வரால் உண்டாக்கப்பட்டன.

அவருடைய வாயிலிருந்தும் புஜத்திலிரு ந்தும், தடையிலிருந்தும், பாதத்தலிருந்து ம். பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரஜா திகள் பிறந்தார்கள். இவர்களிலிருந்த பூமி யில் ஜனவிருத்தியாயிற்று. சூரியன், அவரு டையகண்ணில் இருந்தும், சந்திரன் அவரு டையமனதிலிருந்தும் உதித்தார்கள்.

பிரம்மாவுக்கு நான்கு முகங்களென்றும் திக்குக்கொரு முகமென்றும், வழக்கமாய்ச் சொல்லப்படுகின்றது. சிலவேளை எந்தப்பூ தியங்களைக் கொண்டு ஒன்றைச் சிருஷ்டித் தாரோ, அந்த நாலுபூதியங்களுக்கு நாலு முகங்களென்றுஞ் சொல்லப்படுகின்றது. க ட்டுக்கதைகளில் அவருக்குப் பூர்வத்தில் ஐந் துசிரசு உண்டாயிருந்ததென்றும் ஐந்துசிர சுகளையுடையசிவனுல் ஒன்று அறுத்துவிட ப்பட்டதென்றுங் கூறப்பட்டிருக்கின்றது.

சிருஷ்டி சத்துவத்திற்கு சிவப்புநிறம் உ ரியது. பிரம்மாவைக்குறித்த படங்களெல் லாம் சிவப்புவர்ணத்தில் எழுதப்படுகின் றது. அந்தவர்ணம் அக்கினிக்கும். சூரியனும் பத்துக்குஞ் சாயலாகக் காட்டப்படுகின் றது. அதைப்போலவே பிரம்மாவென்று சொல்லப்படுகின்ற பூமிக்கு அல்லது சடப தார்த்தத்திற்கும் அதுவேவர்ணமா யிருக்கி றது. அகையால்பிரம்மாநிலமாகவிருக்கிறார் அந்தப்படியே பின்னுல்விட்டுணுவும் நிலமா கவிருக்கிறார். பிரம்மா தியாயிருக்கிறார் அ

ந்தப்படியே சிவனும் தியாயிருக்கிறார். எல்லாத் தரிமூர்த்திகளும் சூரியனுகவே யிருக்கிறார்கள்: சூரியன் நித்திய ஒன்றுகியபிரம்மத்தின் அடையாளமாக விருக்கின்றது. அக்கினி காலமென்னும் சர்வமாறுதலுக்கு அடையாளமாக விருக்கின்றது. சிவன்சாதாரணமாகவும் பிரம்மா ஒவ்வொரு சமயத்தினுங் காலத்துக்குச் சம்பந்தப்படுகிறார்கள். எல்லாத்தேவர்களும் ஆழ்ந்து விசாரிக்குமிடத்தில் இம்மூன்று சததுவங்களுக்குள்ளாகவே முடிவாகிறார்கள். முன்னடையாளங்காட்டுகிற சூரியனுகிய பிரம்மாவொரே கடவுளிடத்தில் அந்தச்சதத்துவங்களடங்கியிருக்கின்றன. பிரம்ம சமயத்தாரால் அவரே விஷ்ணுவென்றும். அவர் சிவனென்றும். சகலவல்லவரென்றும், சர்வக்கியரென்றும், சர்வவியாபகரென்றும், எல்லாவிதப் பக்திக்கும் முதலென்றும், தேவாதி தேவனென்றும். சொல்லப்பட்டிருக்கின்றது.

வேதங்களில் கூறப்பட்டிருக்கிற அளவிறந்த உருபசப்படுத்திச் சொல்லப்படுகிற பேர்களும் வஸ்துக்களின்பேர்களும், மும்மூர்த்திகளுடைய பலப்பட்ட பேர்களிலடங்குகின்றன. அவைகள் கடைசியில் ஒரேகடவுளில் அடங்குகின்றன. வேதத்தின் நிகண்டி அல்லது நிரிசொல்லகராதி தேவர்களின் மூன்று நாமாட்டவணைகளோடு முடிகின்றது. முதில் நாமாட்டவணையில் அக்கினிக்கு ஏகார்த்தபதங்களாக யோசிக்கத்தக்கபேர்கள் அடங்கியிருக்கின்றன. இரண்டாவது நாமாட்டவணையில் வாயுக்கு ஏகார்த்த பதங்களாக யோசிக்கத்தக்க பேர்களடங்கியிருக்கின்றன. மூன்றுவது நாமாட்டவணையில் சூரியனுக்கு ஏகார்த்தபதங்களாக யோசிக்கத் தக்க பேர்களடங்கியிருக்கின்றன. நிருக்தத்தின் கடைசிப்பாகம் தேவர்களுக்கு முழுதுஞ்சம்பந்தப்பட்டதாயிருக்கின்றது.

அதில் கடவுளர் மூவரேயென்று இரட்டித்து உறுதியாகச் சொல்லுகின்றது. அதாவது (திஸரா ஏவாதேவதா)என்று ஒருவசனம் கூறப்பட்டிருக்கின்றது. இந்தமூன்றுதேவர்களும் வேதவசனங்களால்ஸ்தாபிக்கப்படுகிறபிரசாரம்,ஒரேகடவுளாகஸ்தாபிக்கப்படுகிறார்கள். நிருக்தசாஸ்திரத்தின் ஆதாரத்தின் பேரிலும்வேதாதாரத்தின்பேரிலும், கடவுள் ஒருவரேயென்றுஸ்தாபிக்கப்படுகின்றது. இவருக்கு வேதஅட்டவணையாரம்பத்தில் மூவரும் ஒருவரேயென்று தெளிவாகவும்பொழிப்பாகவுங் கூறப்பட்டிருக்கின்றது.

கடவுளர்மூவராமாத்திரமிருக்கிறார்கள். அவர்களுடைய ஸ்தானங்கள்பூமி,இடைவெளி வானம், இவைகளாகவிருக்கின்றன. அவையாவன அக்கினி, வாயு, சூரியனெனலாம். தேவர்கள்இரகசியமானபேர்களால்உச்சரிக்கப்படுகிறார்கள். சிருஷ்டிகளின் கர்த்தாவாகிய பிரஜாபதியவர்களில் ஒருமித்தகர்த்தாவாகவிருக்கிறார். ஓம் என்கிற அக்ஷரஒவ்வொருதேவனையுங் குறிக்கின்றது. அது அளவிறந்த ஒன்றுகியபிரம்மத்துக்குஉரித்தாகின்றது ஓரேகடவுளுக்கு உரித்தாகின்றது. ஆத்மாவுக்கு உரித்தாகின்றது. இந்தப்பலமண்டலங்களுக்குச் சம்பந்தமாயிருக்கிற மற்றதேவர்கள் மூன்றுகடவுளருடைய கூருகவிருக்கிறார்கள். அவர்களுடைய பலகிருத்தியங்களைப்பற்றிப்பலநாமங்களிடப்படுவது மல்லாமல்பலவிதமாய்க்குறித்துச் சொல்லப்படுகின்றார்கள். ஆனால்வாஸ்தவமாய் ஓரேகடவுள் மாத்திரமிருக்கிறார். அதாவது மகாத்மா. அவர்சூரியனென்று சொல்லப்படுகின்றார். ஏனெனில் சூரியன்எல்லாவஸ்துக்களுக்கும் ஆத்மாவாக விருக்கின்றார். இந்தப்பிரகாரம் அறிஞராற் கூறப்பட்டிருக்கின்றது. அசைகின்ற ஜகத்துக்கும் ஸ்தாவரமாயிராநின்றததத்துவங்களுக்கும் சூரியன் ஆத்மாவாகவிருக்கின்றார். மற்றதேவர்கள் அவருடைய கூருகவிருக்கின்றார்கள். அது அறிஞராற்கூறப்பட்டிருக்கின்றது. ஞானிகள் அக்கினியை இந்திரன், மித்திரன், வருணன், முதலாகியநாமங்களால் அழைக்கிறார்கள்.

பிரமாவுக்குச்சத்திசரசுபதியேயாம். குறித்துச்சொல்லுமிடத்தில் பலனியல்லது, நிருமாணிப்பு, சர்வ வலிமையாதல், சர்வஞான முள்ளவ ளென்பதேயாம்.

சடபதார்த்தத்துக்கும் உருபகபாவனையாகச்சொல்லப்படும்பிரம்மாவுக்கு, வாகனம், பாரத்துக்கடையாளமான அசமந்தமுள்ள அன்னப்பக்ஷியேயாம்.

பிரமாவின் சமயிகள். விஷ்ணு சமயிகளோடும், சிவசமயிகளோடும், வாதுசெய்து தோல்வியடைந்ததினுல் அவருடைய கோவில்களிடித்து நிர்மூலம் செய்யப்பட்டன.

இன்றையதினம் இவ்வளவோடு நிறுத்திவருகிறசபையில் விஷ்ணுவைக் குறித்துச் சொலலப்படுமென்று சொல்லிமுடித்தார்.

ஆசுசுவரி ஏப்பில்ரமீகவ உடமலைப்பேட்டை

இங்ஙனம் தங்கள் தாழ்மையுள்ள ஊழியன் வி-முனியப்பிள்ளை கோர்ட்டுவக்கில்.

நிருபம்.

ம - ரா - ரா - ஸ்ரீ தத்துவபோதினியின் கர்த்தரவர்கட்கு,

ஐயா.

இச்சேலமாநகரில் சென்றமாதம், கஅ-ஆகிய செவ்வாய்க்கிழமை காலையில் ஓர் பாலகாபாடசாலை யொன்று ஸ்தாபிக்கப்பட்டது. அச்சமயத்தில் நடந்த சவிஸ்தாரங்களை இதனடியில் வரைகின்றனன். அவற்றை தயவுசெய்து தங்களுடைய புகழ்பெற்ற பத்திரிகையி லேர்பாகத்தில் பிரசுரப்படுத்தும்படி மன்றாடுகின்றனன்.

இந்நகரத்தி லோர்பாலிகாபாடசாலையேற்படுத்தவேண்டுமென்று சிலர் முயற்சிசெய்துவந்தும் ஒருகாலத்தில் பாடசாலையேற்பட்டும் நிலைக்காமற்போனதினால், இக்காரியம் இதுவரையிலும் கைகூடாமலேயிருந்தது. மீண்டும் இவ்விடத்திலுள்ளசுதேசகனவான்களும், முக்கியமாய் இவ்விடத்து வேதசமாஜத்தி லொருவரும், கலெக்டர்கச்சேரியில்உத்தியோகம்பெற்றோருமாகிய வீரராகவமுதலியார் என்போரும், விசேஷமுயற்சிசெய்து, நீடித்து நிலைக்கச்செய்யும்படியான ஆதாரங்களைத்தேடி, தகுந்த அஸ்திபாரத்தோடும், இப்பாடசாலையை மேற்குறித்த சுபதினத்தில், ஸ்தாபித்தார்கள். அன்று காலை எ-மணிக்கெலலாம் பல சுதேசிகளும், வித்தியாப்பியாசம் செய்ய விரும்பிய தமது புத்திரிகளோடும், சோதரிகளோடும், வந்து கூடியிருக்க, இவ்விடத்தில் சமாஜதலைவராகிய - டி. அண்ணாசாமிமுதலியார் அக்கிராசனாதிபராக வீற்றிருந்தனர். அவருடைய உத்திரவின்படி யாவரும் எழுந்து நிற்க, எங்கள் காரியதரிசியார் அடியில்குறித்த ஸ்தோத்திரத்தை வாசித்தனர்.

ஓம்பரவ்யும்ஹமேனமஃ.

ஓ அருள்நிறைந்தகடவுளே! யாங்களிந்த சுபதினத்தில் தொடங்கும் காரியம் முற்றும் சித்திபெறும்படி அநுக்கிரகம் செய்தருளுவாய். இப்பாடசாலை நாள்தோறும் விருத்தியடைந்து நிலைபெறச்செய்வாய். இம்மி இந்நகரத்துப்பெண்களைச் சூழ்ந்த அஞ்ஞானவிருளைநீக்கி, மெய்ஞ்ஞானஒளிவீசுங் கதிரோனாகி, என்றும் பிரகாசிக்கச் செய்வாய். என்றும் பல்லாண்டாயுள்ள எம்பெருமானே! நினதற்புதத்தை விளக்கி, எமது ஆத்மஉஜ்ஜீவனத்துக்கும், மோக்ஷத்துக்கும், சாதனமாகிய வித்தியாமிருதத்தை எங்களிற்பகுதியாகிய எமது பெண்களுக்குப் புகட்டி, அவர்களை வாழச்செய்யும் பொருட்டு, யாங்கள்செய்யும் சிறுமுயற்சி நினதருளின்றி சற்றும் பயன்படுமோ? சர்வக்ஞனும், சர்வபூததயாபரனுமுள்ள எமதப்பனே! நின்செயலித்தன்மையதெனவறியஎங்களிற்றறிவாலாகுமோ? எமதுகர்மவசத்திலுலோ மற்றெந்தகாரணத்திலுலோ, அநேக நூற்றாண்டுகாலமாய், எங்களுக்குப் பிரியமான நண்பராய் நீ படைத்த அழகிய தனமையள்ளாஸ்திரீகளை வஞ்சித்து அஞ்ஞானத்திலாழ்த்தி இபரசுகங்களிரண்டையும்போக்கி, அவர்களுடைய தாழ்வையாங்களும் பங்கிட்டுக்கொண்டவர்களாய்வருந்தினோம். இனியாவது கர்த்தனே, எமது பிரியமுள்ளசோதரிகளும், புத்திரிகளும், ஞானக்கண் பெற்றோராகி, நினதன்பால் அறிவிற்சிறந்து நினைச்சரணடைந்து சத்வகுணசீலராய், நினதருளிற்றானேவாழ்ந்துசுகமுடையோராகி, எம்மையுஞ்சுகிக்கச்செய்வராக. தேவனே! இப்பாடசாலைவாழிய, போதகரும்வாழிய, போதிக்கப்படுவோராகிய இச்சிறுகுழந்தைகளும் வாழிய, இவர்கள் நிஷ்களங்கசித்தராகி, இன்றிருப்பதுபோலவே, பகுத்தறிவும், மெஞ்ஞானமும் பெற்று, பக்திபிலும் சன்மார்க்கத்திலும் மென்மேலும் பெருகும்படி அநுக்கிரகிபபாய். ஓம்தத்வத்.

பின்புகாரியதரிசியார்தாமேகுழந்தைகளில் ஒவ்வொன்றுக்கும் அக்ஷராப்பியாசஞ்செய்வித்தார். அன்று சுமார் பத்து பன்னிரண்டுபிள்ளைகள் கூடியிருந்தார்கள். அவர்களில் சிலர்தெலுங்குமசிலர்தமிழும்வாசிக்கத்தொடங்கினர். இரண்டொருவர்மாத்திரம் கொஞ்சம் வாசிக்கதெரிந்தவர்களாயிருந்தனர். ஏனையோர்யாவரும் நூதனமாகப் பிராரம்பஞ் செய்யவேண்டியவர்களாயிருந்தனர். இவ்வாறு அக்ஷராப்பியாசஞ்செய்வித்தபிறகு, பிள்ளைகளுக்குச்சருக்கலாவாழைக்கனிமுதலியவும் அப்பாடசாலையை கௌரவிக்க வந்திருந்த கனவான்களுக்குத் தாம்பூலாதிகளுங் கொடுக்கப்பட்டன. கடையில் காரியதரிசியார் அடியில்வரும் ஸ்தோத்திரத்தை வாசித்தனர்.

ஓம்வ்யும்மமேனமஃ.

சங்கற்பமாத்திரத்தாலேயே அகிலாண்டங்களையும் படைத்துக்காத்தழித்து, நித்தியானந்த ஸ்வரூபியாய் எங்கும் நிறைந்திருக்கிற ஆதாரத ஜனவாச்சல்லியனுகிய அப்பரமபுருஷனே மனனம் செய்வோமாக.

துஷ்டஜனநிவாரகனும் சிஷ்டஜனபரிபா

லகனுமாய், அகிலஸத்துவரூபனு யிருக்கிற பரப்பிரம்மத்தின் பரமபதத்தில் வதிக்கின்ற மாதுசீலனின் ஹிருதய கமலகர்ணிகா மத்தியில் சுவலித்துக் கொண்டிருக்கிற திவ்வியதேஜமும், சத்வகுணபுஞ்சனும், பரமபக்தருக்குச் சுலபனும், பக்திஹீனருக்குத் தூர்பலனுமாய், அத்தியற்புத புருஷனுய் அசமானனும், அதிசிரேஷ்டனுமாய், சத்தியமே சுவரூபமாகக் கொண்டிருக்கின்றவனுமான அப்பரமேசுவரனை நமஸ்கரிப்போமாக.

எந்தப்ரபுவின் வர்த்தனுர்ச்சைகளும், சிக்ஷைதையும், லீலைகளும், சுபகீர்த்தனங்களும் அற்புதங்களாயிருக்கின்றனவோ, எவனை ஆராயிப்பதினுல் தோஷங்களெல்லாம்நீங்கி உலகம்சுகமடையுமென்று சொல்வார்களோ, அப்படிப்பட்ட பாபநிவாரகனும் சுகதாயியுமாகிய அப்பிரபுவை ஆராயிப்போமாக.

சகலதேசங்களிலுமுள்ள, பாபத்தொழில் புரிவோரும்சண்டாளர்களும், எந்தத்திவ்யாத்மசுவரூபனைச் சேவித்துப் பாகவதசிரேஷ்டரை ஆராயித்துப் பாவனராகின்றனரோ அப்படிப்பட்ட நிர்விகாரனுனசர்வாந்தரியாமியை நமது மனதில் எப்போதுஞ் சிந்திப்போமாக.

ஓஅருள்வள்ளலே! எமைப்பிரேமையுடன் எடுத்துவளர்த்த பிதாவாயும், அன்புடன் அணைத்துக்காத்த அன்னையாயும், எமது கண்பரானசகல சுஜனங்களாயும், சர்வமுமாம், சர்வத்திலும் ஒட்டியும் ஒட்டாதவனுயும் இருக்கிற ஓஹாத்மனே, சஞ்சலசித்தராயிருக்கிற புல்லறிவாளராகிய அடியாருக்குநின்னருளாலன்றி வேறெந்தவழியால் நின்அன்பு உறுதிப்படும்.

ஓசரணுகதபோஷகா! அவிவேகமென்னும் மேகத்தாலமறைக்கப்பட்டு,ஏவ்வழிகளிலும் துக்கங்கள் சூழ்ந்தஉலகமாயாமார்க்கத்தினின்றும் எம்மைமீட்பித்துநின் பக்தியாகிய சத்கதியிற் செலுத்திரக்ஷித்தருள்வாயாக.

ஓம்தத்ஸத்.

இம்மு வாசித்துமுடிந்தவுடன் பாடசாலையைநடத்தவேண்டிய திட்டங்களேற்படுத்திவிட்டு சபை கலைந்தது. இத்திருவிழாவைச் சிறப்பிக்கும் பொருட்டு இத்துடன் அனுப்பும்கானங்கள் ‡ இயற்றப்பட்டது. அச்சமயத்தில்வந்திருந்தஓர்வித்துவானுல்பாடிகொடுக்கப்பட்டன இவற்றையும்மேல்குறித்தஸ்தோத்திரங்களையும் இப்பாடசாலையின் உபயோகத்துக்காக பிரத்தியேகமாய் அச்சிட்டனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

கஅசுசுஞுல
சூலை-மீ. } இங்ஙனம்.
சேலம். } சேலம்வாசி.

அமிர்தவசனியின்,

விளம்பரம்.

அமிர்தவசனி என்னும் பெயருடைய சிறுபத்திரிகை யொன்றைப்பிரதிமாதம் இரண்டாவது சனிவாரந்தோறும் நாங்கள் பிரசுரஞ்செய்ய உத்தேசித்திருக்கின்றோம்.

இச்சென்னையம்பதியிலுள்ள பற்பல பாலிகா பாடசாலைகளில் கல்வி பயின்றவர்களும், தற்காலத்தில் கல்விகற்பவர்களுமாகிய எம்போலிய ஹிந்துஸ்திரீகளுக்கு நல்லறிவி நல்லொழுக்கங்களை விர்த்திசெய்விப்பதே இப்பத்திரிகையின் கருத்தாம்.

சமயதருமம், ஆசாரதருமம், இலக்கிய இலக்கணங்கள், கதைகள பூகோளங்கள், கணிதம், ஜெந்து சுபாவம்சுபாவம், பாகசாஸ்திரம் பல்வகைப்பட்டதையல்கள், விடுகதைகள், விநோதகதைகள், பழமொழிகள், முதலிய பலபிரயோஜனமான விஷியங்களை எங்களாலியன்றவரையில் இப்பத்திகையின் கண்ணே இயற்றுவிக்க முயலுவோம். எங்கள் அபிப்பிராயங்களை விளக்கத்தக்க சிலஉசிதமான சித்திரப் படங்களையும் இதிற்காணலாம்.

இதன் கிரயவரலாறு:—

பிரதி க-க்கு வருஷத்தில் அணு ஐந்து.
,, மாதத்தில் அணு அரை.

இப்பத்திரிகையின் விஷியமாய்க் கடிதமெழுதுவோர்கள் அமிர்தவசனியின் பத்திராதிபர்களுக்கு என்று மேல்

‡ இவை இப்பத்திரிகையின் அக்கிராசனத்தில் கடவுள்துதியாக அச்சிட்டிருக்கிறோம்.

விலாசம் போட்டு, சென்னைபூக்கடை வீதியிலுள்ள ப்ரீசர்ச்சுமிஷின் பாலிகாபாடசாலைக்காவது சென்னை ஆசாரப்பன்வீதியிலிள்ள ப்ரீசர்ச்சுமிஷின் பாலிகாபாடசாலைக்காவது அனுப்பலாம்.

கஅசுச-ஹூ) டிசம்பர்மீ உ0கூ) பத்திராதிபர்கள்

சந்தாதார் விளம்பரம்.

தத்துவபோதினிக்குக் கையொப்பம்செய்பவர்கள் அனுப்புந்தொகைச் சேர்ந்ததைக்குறித்து, உத்தரப் பிரத்தியுத்தரங்கள் வைத்துக்கொள்ள அனுகூலப்படவிலலை யாலகயால், அந்தந்த மாதத்தில் வரும் லகமியாப்பங்களைக் குறித்து, மருமாதம் தத்துவபோதினியில் ஒருஅட்டவணைப்பிரசுரம் செய்யப்படும். கடந்தமாதத்தில் வந்தசந்தாதாரர்களுக்கு அட்டவணை வருமாறு.

சந்தாதார்களுடைய அட்டவணை.

சென்னை, தர்மலிங்கமுதலியார்.....க
" இராமாஞ்சையர்.....க

வறுமையில்.

ஆசிரியவிருத்தம்.

ஆபத்திலும் அநுசம்பத்திலும் பெரியதானசுகதுக்கமெதிலும்,
ஆக்கமோடிகளுடனனுப்பொழுதுமிடைவிடாதய்யவிற்றிருப்பாய்
பூபநிடனெனொத்த பொருளுளோர்மீதிலும் பொறுமையுளவரியர்தும்
பொதுவாயளாவிம்மரகூத்துவபுள்ள பூரணவருட்பெருக்கே.
தாபத்திரியங்களைப் பொருமையுடனும் சதாசகதோஷமொடுசஹித்து,
தாழவுற்றவென்றிதிக்கலியாதுளன்றுபுன் சார்பில் சரிக்கவுதவி,
பாபத்திலுழலுகின்ற பாவியேனென்னையும் பரிவுடன்காத்தருள்வாய்,
பாராதியெங்களுக்கண்ணருள்வதுத்தமம் பரமானபேரின்பமே.

———

செல்வத்தில்.

ஆசிரியவிருத்தம்.

பெருமிதாளச்செல்வ பேற்றைக்கொடுத்ததென பெருநரகிலாழ்த்தவன்றே,
பேசரியவறநெறியில் பேரின்பமுறவலவொ பெரிதாயதனைநீந்தினை,
கருணைப்பிரவாகமறை வருஷிக்குமேமே கருதரியசர்வேசனே,
கையிலாவன்பினெடு நீயருள்செல்வத்தை காத்நிய்யும்வகையுணர்த்தாய்
அருமையொடு பெற்றதாயென்னவே என்னருகில் அநுதினமுநின்றய்யனே,
ஆனதோர்செல்வத்தை யாண்டுலகவாழ்க்கையை அனுபவிக்குமபற்பல,
தருமவழியாவையும் தவராதுயான்றறு தக்கபடியொழுகிமேலும்,
தனதனத்தால்பெரும் கருவமடையாதபடி தயவுடன்காத்தருளுவாய்.

———

தனியான, ஒப்பற்ற, மெய்யறிவநந்த பிரும்மம், சாந்திபூர்ணம், அமிருதம், அதுஉருவும்குற்றமுமற்றது. இதையறிந்தவர்அமிருதராவார்; மற்றவர்துக்கமேயடைவார்.

மெய்யேவெல்லும், பொய்யல்ல.

சென்னப்பட்டணம்,—தத்துவபோதினி அச்சுக்கூடத்தில், கா. தெய்வசிகாமணி முதலியாரால், பதிப்பிக்கப்பட்டது.